தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

விலை ரூ.15 – மலர் 22 – இதழ் 4 – ஆகஸ்ட் 2020

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

சுதந்திர தின விழா கொண்டாட்டங்கள்...

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ) மற்றும் செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

ஆகஸ்ட் 2020

அன்புள்ள சகோதரிகளே,

என்னுடைய கருத்துக்களை முற்றம் வாயிலாக உங்களுடன் பகிர்ந்து கொள்வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்று பரவலுக்கு எதிராக பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் உலகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நம் தமிழகத்திலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலில் அனைத்துத் துறையினரும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு, கொரோனா வைரஸ் தொற்று பரவலினை தடுத்து வருகின்றனர். இந்த நடவடிக்கைகளில் தன்னலமின்றி ஈடுபட்டு வரும் அனைவரும் பாராட்டுக்குரியவர்களே.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற குறள் வரிகளுக்கேற்ப கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கையில் சுய உதவிக் குழுக்களின் ஆற்றலையும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், ஊரக வளர்ச்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மகளிர் சுய உதவிக் குழுவினரும், கொரோனா வைரஸ் தொற்று பரவல் தடுப்பு சாதனங்களை தயாரிப்பதோடு மட்டுமல்லாமல், விழிப்புணர்வு ஏற்படுத்துவது, அத்தியாவசியப் பொருட்களை வீட்டிற்கே சென்று வழங்குவது, அரசு நலத்திட்ட உதவிகளைப் பெற்றுத் தருவது போன்ற ஆக்கப்பூர்வமான பணிகளில் தன்னலமின்றி ஈடுபட்டு அனைத்து தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்று வருவது எனக்குப் பெருமையாக இருக்கிறது.

தற்போது மழைக்காலம் தொடங்கி விட்டது. தெருக்களில் தேங்கி நிற்கும் மழை நீரால் பல்வேறு நோய்கள் பரவும். இதிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள மழை நீர் தேங்காத வண்ணம் நீர்ப்போக்கு வழிகளில் உள்ள தடைகளைக் களைவது, சுற்றுப்புறத்தைத் தூய்மையாகப் பராமரிப்பது போன்றவற்றில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைப் போக்கிட நம் தமிழக அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தீட்டி, அவற்றைக் கடைப்பிடிக்க அறிவுறுத்தி வருகிறது. அரசின் அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிக்க வேண்டியது பொதுமக்களின் கடமையாகும். சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களான நீங்கள் அரசின் அறிவுறுத்தல்களை அவசியம் கடைப்பிடிப்பதுடன், மற்றவர்களையும் கடைப்பிடிக்கச் செய்திட செய்ய வேண்டும். நம்முடைய ஒற்றுமையான செயல்பாட்டினால் கொரோனாவை நாம் விரைவில் வெற்றி கொள்வோம்.

அனைத்துத் தரப்பினரின் உடல் நலத்தையும் பேணி, அவர்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்தும் உங்களின் தன்னலமற்ற செயல்பாடுகள் மேலும் தொடர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர் (பொ)

குறளும்-பொருளும்

ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்

தம்மால் செய்ய முடியும் செயலையும், அதைச் செய்வதற்கு ஏற்ற ஆற்றலையும் அறிந்து, அதையே மனத்துள் சிந்தித்துச் செயலாற்றுபவருக்கு முடியாதது ஒன்றும் இல்லை.

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் | wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

protncdw1@gmail.com

உள்ளே...

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்குதல் மற்றும் கலந்துரையாடல் 05

சுதந்திர தின விழா நிகழ்வுகள் 09

கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் 10

சுய உதவிக் குழுக்களின் செயலி துவக்கம் 13

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து காணொலிக் காட்சி மூலம் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டங்கள் 18

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 20

முற்றக் கச்சேரி 26

தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) 28

கொரோனா தடுப்புப் பணியில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் பணிகள் 30

➜ முற்றம் வாசகர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

அச்சு மற்றும் வெளியீட்டு செலவினங்கள் அதிகரித்துள்ள காரணத்தினாலும், தற்போது மாறிவரும் சூழலுக்கேற்ப முற்றம் இதழை புதிய தொழில்நுட்ப வடிவில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ள காரணத்தினாலும் சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாக விளங்கி வரும் நமது முற்றம் இதழின் விற்பனை விலை மற்றும் ஆண்டு சந்தா கட்டணங்கள் செப்டம்பர் 2020 முதல் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்பட உள்ளது என்பதை அனைத்து முற்றம் வாசகர்களுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றம் இதழின் தனிப்பிரதி / சந்தா விபரம்	தற்போதைய விலை	செப்டம்பர் 2020 முதல் மாற்றம் செய்யப்படவுள்ள புதிய விலை	செப்டம்பர் 2020 முதல் முற்றம் வாசகர்களுக்கான சலுகை விலை
முற்றம் இதழின் தனிப்பிரதி	**ரூ. 15**	**ரூ. 20**	**ரூ. 20**
ஒரு ஆண்டு சந்தா	**ரூ. 180**	**ரூ. 240**	**ரூ. 200 (தள்ளுபடி ரூ. 40)**
இரண்டு ஆண்டு சந்தா	**ரூ. 360**	**ரூ. 480**	**ரூ. 400 (தள்ளுபடி ரூ. 80)**
மூன்று ஆண்டு சந்தா	**ரூ. 540**	**ரூ. 720**	**ரூ. 600 (தள்ளுபடி ரூ. 120)**

முற்றம் இதழின் வாசகர்கள் அளித்து வரும் தங்களின் ஆதரவினை இவ்விதழுக்குத் தொடர்ந்து வழங்கி உற்ற தோழியாய், உறுதுணையாய் என்றும் இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– முற்றம் இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

மலர் 22
இதழ் 4
ஆகஸ்ட் 2020
விலை ரூ.15

- **கௌரவ ஆசிரியர்கள்**

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ) மற்றும்
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
தலைமை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

- **பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்**

எஸ். சின்னப்பன், செயலர், முற்றம்

- **ஆசிரியர் குழு**

கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

கே. சுமதி, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

எஸ். சாமுவேல் இன்பதுரை, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

- **நிர்வாக ஆசிரியர்**

சி. சந்தோஷினி சந்திரா, பொது மேலாளர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **நிதி நிர்வாகம்**

சு. இராமலெட்சுமி, நிதி ஆலோசகர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்**

கூ. பாபு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **துணை ஆசிரியர்: ஏ. கண்ணன்**
- **முதுநிலை கணக்காளர்: சு. சசிகலா**
- **பிழை திருத்துபவர்: எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
- **கணினி வடிவமைப்பு: டி. ராஜரத்தினம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

நமது பயம்.... கொரோனாவின் பலம்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா தொற்றை தடுப்பதற்கும், மக்களை அதிலிருந்து காப்பதற்கும், அரசு மற்றும் தன்னார்வலர்கள் பெரும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். கோவிட்-19 தடுப்பு மருந்தினை கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிகளில் பல நாடுகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. 2020 மார்ச் மாதம் முதல் பல கட்டங்களில் அமல்படுத்தப்பட்ட முழு ஊரடங்குகளானது படிப்படியாக தளர்த்தப்பட்டு வரும் நிலையில் மனம் தளராமல் இந்த தொற்று கிருமியை எதிர்த்துப் போராடி வருகின்றோம். இந்த தொற்றுக் கிருமியை எண்ணி பயப்படுவதுதான் மிகப் பெரிய பாதிப்பினை உருவாக்கும் என வல்லுநர்கள் கூறுகின்றனர். எனவே, நமக்கு வரும் சாதாரண சளி, ஜுரம் கூட கொரோனாவாக இருக்குமோ என்ற பயத்தை அறவே அகற்றுவதே பெரிய தடுப்பு மருந்தாகும்.

புயல், வெள்ளம், சுனாமி மற்றும் நிலநடுக்கம் என பல பேரிடர்களை எதிர்கொள்வதற்கு பழகிக் கொண்டு விட்டோம். அதோடு, இந்தப் பேரிடர்களால் ஏற்படும் சிரமங்களைக் குறைத்துக் கொள்ளவும் கற்று வைத்துள்ளோம். இந்த கொரோனா கிருமியின் தாக்கம் குறைந்தது 10 ஆண்டுகளுக்காவது இருக்கக் கூடும் என்ற கருத்து நிலவி வருவதால், கொரோனா பரவல் சூழலை எதிர்த்து வாழ்வதற்கு பழகிக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கின்றோம்.

தொற்றுக் கிருமியை எதிர்க்கும் ஆற்றலை பெறுவதற்கான உணவுகள், கிருமி தடுப்பிற்கான பக்கவிளைவில்லா மருத்துவம், தொற்று பரவாமல் இருப்பதற்கான சுற்றுச்சூழலை உருவாக்குவது, அவ்வப்போது அரசு அறிவிக்கும் வழிகாட்டுதல்களை பின்பற்றுவது ஆகியவற்றை தெளிவாகக் கற்று அறிந்து வைத்திருக்க வேண்டிய தேவையும் நேரமும் வந்துவிட்டது. அதோடு, விரைவில் இதற்கான மருந்துகள் வெளிவந்து விடும் என்ற செய்திகள் ஆறுதலாகவும் உள்ளது. இந்த தொற்றுக் கிருமிக்கு பயப்படாத மனிதர்களைக் கண்டு கொரோனா பயந்து ஓடிவிடும் என்பதே உறுதி.

இப்படிக்கு,

(எஸ்.சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்குதல் மற்றும் கலந்துரையாடல்

ஈரோடு மாவட்டத்தில் 17.07.2020 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களால் தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், கோவிட்- 19, நேரடி வங்கிக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 778 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மொத்தம் ரூ. 20 கோடிக்கான வங்கி கடன் இணைப்பு மற்றும் அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் கீழ் வேலைக்குச் செல்லும் 500 மகளிருக்கு சுமார் ரூ.1.25 கோடி மானியமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி.கருப்பணன், சட்டமன்ற உறுப்பினர்கள், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. கதிரவன், இ.ஆ.ப., ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் 15.07.2020 அன்று கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மு. தம்பிதுரை, திரு. கே. பி. முனுசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சி.வி. ராஜேந்திரன், திருமதி. என். மனோரஞ்சிதம், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். சு. பிரபாகர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுடன் கலந்துரையாடல் மற்றும் கொரோனா சிறப்புக் கடனுதவி வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 06.08.2020 அன்று திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பல்வேறு திட்டங்களில் முடிவுற்ற பணிகள் மற்றும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், மகளிர் திட்டத்தின் கீழ் 320 சுய உதவிக் குழுவை சார்ந்த 3,840 பயனாளிகளுக்கு 13.056 கோடியில் வங்கி கடனுதவிகளையும், பணிக்கு செல்லும் அம்மா இருசக்கர வாகனத்திற்கான மானிய தொகையும் வழங்கினார். தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிறப்பாக செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழு மகளிருடன் கலந்துரையாடல் மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுப்பணித்துறை முதன்மை செயலாளர் டாக்டர். க. மணிவாசன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை முதன்மை செயலாளர் டாக்டர். கே. கோபால், இ.ஆ.ப., தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மு. விஜயலெட்சுமி, இ.ஆ.ப., அரசு உயர் அலுவலர்கள் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் 06.08.2020 அன்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் திரு. ஜி. பாஸ்கரன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் டி. ஜி. வினய், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் 07.08.2020 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களின் மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் திருமதி. வி. எம். ராஜலெட்சுமி, சட்டமன்ற உறுப்பினர்கள், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஷில்பா பிரபாகர், இ.ஆ.ப., தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி. கே. அருண் சுந்தர் தயாளன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் கோயம்புத்தூர் காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில், கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பேருந்தினுள் சென்று பயணிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். உடன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, மாண்புமிகு சட்டப் பேரவை துணைத்தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் ஆகியோர் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் கோயம்புத்தூர் காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில், முகக் கவசங்கள் விற்பனை செய்யும் கடையினை பார்வையிட்டார்கள். உடன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, மாண்புமிகு சட்டப் பேரவை துணைத்தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. இராசாமணி, இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கு கடனுதவி வழங்கும் பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் நிதித் திட்டம் துவக்கம்

கோயம்புத்தூர் மாவட்டத்தில், கொரோனா வைரஸ் பாதிப்பிற்கு பிந்தைய வாழ்வாதார மேம்பாட்டிற்காக மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகிய நகர்ப்புற பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கு ரூ.10,000/- வழங்கும் சிறப்புக் கடன் திட்டமான பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் (PM-SVANidhi) திட்டத்தை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் துவக்கி வைத்து, சாலையோர வியாபாரிகளுக்கு கடனுதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் திரு. ஜெ. ஷ்ரவன்குமார் ஜடாவத், இ.ஆ.ப., மாவட்ட வருவாய்த் துறை அலுவலர் திரு. டி. ராமதுரை முருகன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கு.செல்வராசு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் இத்திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் கண்காணிக்கப்பட்டு உரிய வழிக்காட்டுதல்கள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெற விரும்பும் சாலையோர வியாபாரிகளிடமிருந்து இதுவரை 550 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 275 விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு, வங்கிகள் மூலம் சாலையோர வியாபாரிகளுக்கு தலா ரூ.10,000/- வீதம் வங்கிக் கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தின விழா கொண்டாட்டங்கள்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 15.08.2020 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், பெருநகர சென்னை மாநகராட்சி காய்ச்சல் சிகிச்சை முகாம்களை நடத்தி கோவிட்-19 நோய்த் தொற்றின் சங்கிலியை உடைத்ததற்காக மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்களுக்கு முதலமைச்சரின் நல் ஆளுமை விருதினை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களுடன், முதலமைச்சரின் நல் ஆளுமை விருதுகளை பெற்றுக் கொண்ட மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு. ஆர். இளங்கோவன் ஆகியோர் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் 04.08.2020 அன்று ரிப்பன் மாளிகையில் உள்ள அம்மா மாளிகையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.ஆர்.காமராஜ் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மைத்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் மற்றும் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப்பண்பாடுத்துறை அமைச்சர் திரு.கே.பாண்டியராஜன் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள், கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு சிறப்பு ஒருங்கிணைப்பாளர்/நில நிர்வாகத்துறை ஆணையாளர் திரு.பங்கஜ் குமார் பன்சால், இ.ஆ.ப., அவர்கள், சென்னை மாநகர காவல்துறை ஆணையர் திரு.மகேஷ்குமார் அகர்வால், இ.கா.ப., அவர்கள் மற்றும் இணை / துணை ஆணையாளர்கள், மண்டல சிறப்பு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருவாரூர் மாவட்டம்

வேளாண் வாடகை இயந்திர மையம் மற்றும் முன்மாதிரி ஊட்டச்சத்து தோட்டம் துவக்க நிகழ்ச்சி

திருவாரூர் மாவட்டத்தில் குடவாசல், நன்னிலம், திருவாரூர் மற்றும் வலங்கைமான் ஆகிய நான்கு வட்டாரங்களில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் வேளாண் வாடகை இயந்திர மையங்கள் செயல்படுகின்றன. மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் கடந்த 14.06.2020 அன்று குடவாசல் வட்டாரம், பிரதாமராமபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் வேளாண் வாடகை இயந்திர மையத்தினை திறந்து வைத்தார்கள். மேலும் 26.06.2020 அன்று நீடாமங்கலம் வட்டாரம், மேலாளவந்தஞ்சேரி ஊராட்சிக்குட்பட்ட தேவங்குடி கிராமத்தில் முன்மாதிரி ஊட்டச்சத்து தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம்

சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் கடன்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், நாமக்கல் மாவட்டத்தில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கீழ் நிதி வரப்பெற்றது. பள்ளிப்பாளையம் வட்டாரத்தில் 27.06.2020 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்களும், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. வி. சரோஜா அவர்களும் கலந்து கொண்டு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள நலிவுற்றோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் என 125 நபர்களுக்கு தொழில் கடனாக ரூ. 45 இலட்சம் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. மெகராஜ், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் மருத்துவர் இரா. மணி, உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதுவரை நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு கோவிட் 19 சிறப்புக் கடன் மற்றும் வங்கி நேரடிக் கடனாக ரூ. 75 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம்

மாற்றுத் திறனாளி மகளிருக்கு சிறப்பு அம்மா இருசக்கர வாகனம்

தூத்துக்குடி மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் சமுதாய பொறுப்பு நிதியிலிருந்து மாற்றுத் திறனாளி மகளிருக்கு சிறப்பு அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் நிகழ்ச்சி தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு, 25 மாற்றுத் திறனாளி உழைக்கும் மகளிருக்கு மூன்று சக்கர வாகனங்களை வழங்கினார். அவ்வாறு வழங்கப்பட்ட மூன்று சக்கர வாகனங்களுக்கு தமிழக அரசு அம்மா இருசக்கர வாகனத் திட்ட நிதியிலிருந்து மானியமாக ரூ. 7,81,250/- மற்றும் மீதமுள்ள கட்டணம் சமுதாயப் பொறுப்பு (CSR) நிதியிலிருந்து ரூ. 6,39,575/- என மொத்தம் ரூ.14,20,825/- விடுவிக்கப்பட்டு, அனைத்து பயனாளிகளுக்கும் மூன்று சக்கர வாகனம் இலவசமாக வழங்கப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் நபார்டு வங்கி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் நபார்டு வங்கி இடையே 10.07.2020 அன்று, இ-மதி இணையதளத்திலிருந்து இ-சக்தி இணைய தளத்திற்கு சுய உதவிக் குழுக்களின் தகவல்களை பரிமாற்றம் செய்து, வங்கி இணைப்புகள் பெறும் பொருட்டு ஏற்பட்ட `Project Partnership'-க்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் கையெழுத்தானது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், நபார்டு வங்கியின் முதன்மை பொது மேலாளர், வங்கியாளர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் நபார்டு வங்கி ஆகியவற்றின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





சுய உதவிக் குழு வங்கி இணைப்பு குறித்து கலந்தாய்வு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில், பொதுத்துறை, தனியார் துறை மற்றும் கூட்டுறவுத் துறை வங்கிகளின் பொது மேலாளர்களுடன் சுய உதவிக் குழு வங்கி இணைப்பு குறித்த கூட்டம் 22.07.2020 அன்று காணொலிக் காட்சி வாயிலாக அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், வங்கியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மண்டல அளவிலான வங்கியாளர் கூட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில், வேலூர், கோயமுத்தூர், மதுரை மற்றும் திருச்சி ஆகிய மண்டலங்களைச் சார்ந்த மண்டல அளவிலான வங்கியாளர் கூட்டம் 28.07.2020 அன்று காணொலிக் காட்சி வாயிலாக அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சென்னையிலிருந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் ஆகியோரும், மண்டல அளவில் திட்ட இயக்குநர்கள், வங்கியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பொதுமக்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்களை வீட்டிற்கே வந்து வழங்கும் சுய உதவிக் குழுக்களின் 'Madras Market' செயலி துவக்கம்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், சென்னை மாவட்டத்தில் செயல்படும் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் இணைந்து 'தெற்கு மண்டல நகர்ப்புற அளவிலான கூட்டமைப்பு (City Level Federation – South Chennai)' என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. இக்கூட்டமைப்பின் கீழ் ஒரு நகர்ப்புற வாழ்வாதார மையம் (City Livelihood Centre) இயங்கி வருகிறது. இம்மையத்தின் மூலம் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்காகப் பல்வேறு வாழ்வாதார செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது கொரோனா ஊரடங்கின் காரணமாகப் பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்களை வாங்க சிரமப்பட்டு வருகின்றனர். மேலும் அவர்கள் வெளியில் வருவதால் கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிகரிக்கிறது. இந்நிலையைத் தடுக்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், 'Madras Market' என்ற செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த செயலியினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து, 'Madras Market' என்ற செயலி மூலம் பதிவு செய்தவர்களுக்குப் பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சியின் 13வது மண்டல அலுவலர் திரு. திருமுருகன் மற்றும் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர் திருமதி. வசந்தி குமரேசன் மற்றும் சுய உதவிக் குழுவினர் உடனிருந்தனர்.

'Madras Market' செயலியைப் பொதுமக்கள் தங்களின் கைபேசியில் பதிவிறக்கம் செய்து, அதன் மூலம் பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள் குறித்த விபரங்களை அளித்து, தேவையானப் பொருட்களை தங்களின் வீட்டிற்கே வரவழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

'Madras Market' செயலியின் மூலம் பொதுமக்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்களைக் கொண்டு சேர்க்கும் பணியில் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த, அம்மா இருசக்கர வாகன மானியத் திட்டத்தில் இருசக்கர வாகனம் பெற்ற பெண்கள் மட்டும் (Delivery Women) ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் செயல்படும் சுய உதவிக் குழு மகளிர் ஒன்றிணைந்து மொத்த விலையில் பொருட்களை வாங்கி அவற்றை 'யுவதி' என்ற பெயரில் மறுகட்டுமானம் இட்டு அப்பொருட்களையும் 'Madras Market' செயலியின் மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

'Madras Market' செயலியானது தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகிறது. எதிர்வரும் காலங்களில் தமிழகத்தின் அனைத்துப் பகுதியிலும் 'Madras Market' செயலியைப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



ஊராட்சி அளவிலான மகளிர் குழு கூட்டமைப்பின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றில் உறுப்பினர்களாக உள்ள மகளிருக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கி, அவர்களுக்கு வங்கிக் கடன்கள் பெற்றுத் தரப்பட்டு சுய தொழில்கள் மேற்கொள்ள வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகிறது. இதன் காரணமாக தற்போது சுய உதவிக் குழு மகளிர் தொழில் முனைவோர்களாக முன்னேற்றம் பெற்று பொருளாதார வளர்ச்சி அடைந்து வருகின்றனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த அமைப்புகளின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பார்வையிட்டு, அவைகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம்

திண்டுக்கல் மாவட்டம், செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சியில் செயல்படும் செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளை 12.08.2020 அன்று திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மு. விஜயலெட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்து, கூட்டமைப்பின் சிறப்பாக செயல்பாட்டிற்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இந்த ஆய்வின் போது திண்டுக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ம. சந்தோஷ்குமார், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார இயக்க மேலாளர் மற்றும் கூட்டமைப்பின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம்

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியம், சேதுக்குவாய்த்தான் ஊராட்சியில் செயல்படும் சேதுக்குவாய்த்தான் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் 27.08.2020 அன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். கூட்டமைப்பு அமைக்கப்பட்ட விபரம், மேற்கொண்ட பயிற்சிகள், நிதி விபரம், தொழில் விபரங்கள், வங்கி கடன் இணைப்பு பெற்ற விபரம், கூட்டமைப்பு மறு சீரமைப்பு மேற்கொண்ட விபரம் மற்றும் சுழற்சி முறையில் நிர்வாகிகள் மாற்றம் போன்றவற்றை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூட்டமைப்பு மேலும் சிறப்பாக செயல்பட பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். .

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி, உதவி திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார இயக்க மேலாளர், வட்டார இயக்க ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்டம்

கடலூர் மாவட்டம், அழகியநத்தம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளை கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்திர சேகர் சாகமூரி, இ.ஆ.ப., அவர்கள் 13.08.2020 அன்று பார்வையிட்டு கூட்டமைப்பின் நிர்வாகிகளிடம் கலந்துரையாடல் மேற்கொண்டார்கள். இக்கலந்துரையாடலில் மகளிர் குழுவினரின் செயல்பாடுகள், வங்கி கடன் பெறுதல், உற்பத்திப் பொருட்கள் விற்பனை மேற்கொள்ளுதல், சந்தை வாய்ப்புகள், சமுதாயம் சார்ந்த பணிகளில் ஈடுபடுதல் போன்றவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மகளிர் குழுவினர் தொழில் தொடங்க வாய்ப்புகள், அனுமதி பெறாத நிதி நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களிடம் கந்து வட்டிக்கு பணம் பெறாமல் வங்கியில் நேரடியாக கடன் பெற்று பயனடைய மாவட்ட நிர்வாகம் உரிய வகையில் மகளிர் குழுவினருக்கு ஒத்துழைப்பு வழங்கும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார். இந்நிகழ்வில் கடலூர் மகளிர் திட்ட இணை இயக்குநர் திருமதி. பூ. காஞ்சனா மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊரக வளர்ச்சி துறை மற்றும் பிற துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கரூர் மாவட்டம்

கரூர் மாவட்டம், தாந்தோணி வட்டாரம், பாகநத்தம் ஊராட்சியில் செயல்படும் பாகநத்தம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளை கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. த. அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ள குழுக்களின் விபரம், மேற்கொள்ளப்படும் தொழில் நடவடிக்கைகள், கடன் இணைப்பு, பதிவேடுகள் பராமரிப்பு, கோவிட் 19 விழிப்புணர்வு நடவடிக்கைகள் போன்றவை குறித்து கூட்டமைப்பின் நிர்வாகிகளிடம் கேட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், பல்வேறு ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் கரூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. ம. வாணி ஈஸ்வரி, உதவி திட்ட அலுவலர்கள், வட்டார இயக்க மேலாளர், வட்டார வயக்க ஒருங்கிணைப்பாளர்கள், கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம்

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் வட்டாரம், மேல்நல்லூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளை திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் 06.08.2020 அன்று பார்வையிட்டு கூட்டமைப்பின் நிர்வாகிகளிடம் கலந்துரையாடல் மேற்கொண்டார்கள். இக்கலந்துரையாடலில் பதிவேடுகள் பராமரிப்பு, பொதுக்குழுக் கூட்டங்களில் உறுப்பினர்களின் பங்கேற்பு, கடன் பெறுதல் மற்றும் கடன் திருப்பம், துணைக்குழுக்களின் செயல்பாடுகள், பெருங்கடன் பெறுதல், கோவிட் 19 முன்னேச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றவை குறித்து ஆலோசனை மேற்கொண்டு, மேலும் சிறப்பாக செயல்பட கூட்டமைப்பின் நிர்வாகிகளுக்கு உரிய அறிவுரைகளை வழங்கினார்.

இந்த ஆய்வில் திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வை. ஜெயக்குமார் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள் ஆய்வு

கிருஷ்ணகிரி மாவட்டம், கொண்டேப்பள்ளி ஊராட்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் கொண்டேப்பள்ளி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளை கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். சு. பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள் 06.08.2020 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இவ்வாய்வின்போது ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் அமைப்பு முறைகள், செயல்பாடுகள் போன்றவை குறித்துக் கூட்டமைப்பினரின் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார். தொடர்ந்து கூட்டமைப்பில் உள்ள ரொக்கப் பதிவேடு, தீர்மானப் புத்தகம், பொதுப் பேரேடு, கடன் கண்காணிப்புப் பதிவேடு, சொத்து இருப்பு பதிவேடு, வரவு ரசீது, செலவு ரசீது போன்ற பதிவேடுகளைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர் மற்றும் பொதுமக்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்பு குறித்த விழிப்புணர்வு கையேடுகளை வழங்கி, அரசின் அறிவிப்புகளை கடைப்பிடிக்கும்படி அறிவுறுத்தினார். இந்நிகழ்ச்சியின் போது மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர் திரு. வே. பிரபாகரன், மாவட்ட விற்பனை சங்க மேலாளர் திருமதி. பு. லோகரட்சகி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. மு. சேகர், வட்டார இயக்க மேலாளர் திருமதி. சு. சங்கீதா, கொண்டேப்பள்ளி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

திருப்பூர் மாவட்டம்

கொரோனா நோய் தொற்று பற்றிய விழிப்புணர்வு பயிற்சி

கொரோனா என்னும் நுண்கிருமிகள் இன்று உலகம் முழுவதும் மனித குலத்திற்கு ஒரு பெரும் அச்சுறுத்தலாகவும் சவாலாகவும் இருந்து வருகிறது. இதனால் பல இலட்சம் மனிதர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், நோய் தொற்று மிக வேகமாக கண்டம் விட்டு கண்டம், நாடுகள் விட்டு நாடுகள், மாநிலங்கள் விட்டு மாநிலங்கள் மற்றும் மாவட்டங்கள் விட்டு மாவட்டங்கள் பரவி வருகிறது. இந்த கொடிய நோய் பரவுதலை தடுப்பது பற்றிய விழிப்புணர்வினை மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு கொண்டு செல்லும் பொருட்டு தேசிய, மாநில, மாவட்ட, ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி என பல்வேறு நிலைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டது.

திருப்பூர் மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்று பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு முதலில் மாவட்ட அளவில் உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் வட்டார மேலாளர்களுக்கு பயிற்சிகள் Zoom App மூலம் வழங்கப்பட்டது. அதனடிப்படையில், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 265 கிராம ஊராட்சிகளிலும் தலா இரண்டு நபர்கள் வீதம் 530 நபர்களுக்கு 21 தொகுதிகளாக இப்பயிற்சிகள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து மாவட்டத்திலுள்ள 4045 சுய உதவிக் குழுக்களுக்கு 1777 தொகுதிகளாக கொரோனா விழப்புணர்வு பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதன் மூலம் 4045 சுய உதவிக் குழுக்களிலுள்ள 48,383 உறுப்பினர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியின் போது சமூக இடைவெளி பின்பற்றுதல், கிருமி நாசினிகள் பயன்படுத்துதல், சோப்பினை கொண்டு சுத்தமாக கை கழுவுதல் மற்றும் முகக்கவசம் அணிதல் போன்ற அம்சங்கள் தவறாமல் பின்பற்றப்பட்டது. அனைத்து சுய உதவிக்குழு உறுப்பினர்களும் ஆர்வமுடன் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். இப்பயிற்சிகளின் போது மாநில அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்ட குறும்படங்கள் மூலம் விழிப்புணர்வு வழங்கப்பட்டது. மேலும், மின்மதி செயலி மூலம் அனைவரும் குறும்படங்களை பார்த்து தெரிந்து கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது. இப்பயிற்சியில் கலந்து கொண்ட பயிற்றுநர்கள் அனைவரும் மின்மதி மூலம் தாங்கள் பயிற்சியில் கலந்து கொண்டதற்கான சான்றிதழினை பதிவிறக்கம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

திருப்பூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் மற்றும் மண்டல உதவித் திட்ட அலுவலர்களின் தொடர் கண்காணிப்பினாலும் இப்பயிற்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் சுதந்திர தின விழாக் கொண்டாட்டம்

நம் நாட்டின் 74வது சுதந்திர தின விழா நாடெங்கிலும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழா நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் அலுவலகத்தின் தூய்மைப் பணியாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். இந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், பொது மேலாளர், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

சுதந்திரக் காற்றை பரப்பிடுவோம்..!

அக்காள் தங்கை, அம்மா மகள் என
இரத்த உறவுகள் ஏதுமில்லாமல்
அக்கம் பக்கத்தினராய்
அருகில் இருப்போரெல்லாம்
ஒன்றாய் சேர்ந்து ஒற்றுமையாய் செயல்படும்
வேற்றுமையில் ஒற்றுமையின் வெற்றி சின்னம் நாங்கள்!
மதமோ இனமோ, படித்தவர் படிக்காதவர் என
ஏற்றத்தாழ்வுகள் ஏதுமில்லா சுதந்திரமான செயல்பாடே
எங்கள் கூட்டமைப்பின் உயிர்மூச்சு!!

வாரம் ஒருநாள் கூடும்போதெல்லாம்
வெட்டிக்கதை பேசுவதில்லை; – மாறாக
கல்வி, வேளாண், மருத்துவம் மட்டுமின்றி
என்ன தொழில் செய்திடலாம்;
எவ்வளவு வருவாய் ஈட்டிடலாம்;
அதற்கு தேவைகள் என்னென்ன,
தடையாயிருப்பது எதுவென்றும்
அதை தகர்க்கும் வழிகளென்ன என்றும்
பயனுள்ள தீர்மானங்கள் பல உண்டு!
அதில் அனைவரின் பங்களிப்பும் அதிகமுண்டு!!

உறவுகள் கூட உதவிட மறுக்க
ஒன்றாய் சேர்ந்த காரணத்தாலோ
வங்கிகளெல்லாம் எம்மைத் தேடி
வீடுகளுக்கே வருவதுண்டு
ஐந்திற்கும் பத்திற்கும் அவதியுற்ற நாங்கள்தான் இன்று
லட்சங்களில் எளிதாய் லட்சியங்களை அடைகின்றோம்!

குழுவோடு நில்லாமல் கூட்டமைப்பில் சேர்ந்ததனாலோ
எத்தனை எத்தனை முன்னேற்றம்! – ஆம்
குப்பைகளை வெளியில் கொட்டுவதில்லை!
மல ஜலம் திறந்தவெளியில் கழிப்பதில்லை!
குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதில்லை!
குழந்தை திருமணங்களை அனுமதிப்பதில்லை!
வரதட்சணை வாங்குவதுமில்லை, கொடுப்பதுவுமில்லை!

மரம் நடுதலை ஊக்கப்படுத்துகின்றோம்!
மருத்துவ முகாம்களை நடத்துவதோடு
தரமான உணவுப்பொருட்கள்,
அழகான ஆடைகள், ஆபரணங்கள் என
எங்களின் தேவைகள் அனைத்தையும்
நாங்களே பூர்த்தி செய்து கொள்கின்றோம்!

ஒற்றுமையும் சுதந்திரமும் ஒருங்கே பெற்று
சிறப்பாய் நாங்கள் செயல்படுவதாலே
ஊரே கேட்கிறது எங்களிடம்...
சாலைகள் சரி செய்திட,
வீதி விளக்குகளை எரியச் செய்திட,
குடிநீர் தேவையை பூர்த்தி செய்திட,
ரேஷனில் பொருட்கள் கிடைத்திட,
வேளாண் இடுபொருட்கள் கிடைத்திட,
உற்பத்தி பொருட்களுக்கு
விற்பனை வாய்ப்பு ஏற்படுத்திட
நடவடிக்கை எடுப்பீர்களா என்று...!

நாங்கள் சுவாசிக்கும் இந்த சுதந்திரக்காற்றை
நாடு முழுமைக்கும் பரப்பிட
இச்சுதந்திர நாளில் உறுதியேற்போம்!!

– கவிமதி, விழுப்புரம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து காணொலிக் காட்சி மூலம் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டங்கள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அனைத்து மாவட்ட திட்ட இயக்குநர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்களுடன் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம், 15.07.2020 அன்று சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது. இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தில், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், திறன் பயிற்சிகள் மற்றும் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் குறித்தும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அனைத்து மாவட்ட உதவித் திட்ட அலுவலர்களுடன் (S&P) காணொலிக் காட்சி மூலம் கலந்தாய்வுக் கூட்டம், தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) முதன்மை இயக்கு அலுவலர்/ கூடுதல் இயக்குநர் திரு. ஜெ. கணேஷ் கண்ணா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மனநலம் தொடர்பாக கடலூர், திருச்சி ஆகிய மாவட்டங்களின் மனநல தோழிகளுக்கு ‘கோவிட் 19 நேரத்தில் மன ரீதியான பாதிப்புகள், மனநல பிரச்சனைகள்’ குறித்து இணையதளம் வாயிலாக பயிற்சி கொடுக்கப்பட்டது. மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (கூட்டாண்மை மற்றும் கூடுகை) திருமதி. கே. சுமதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில் மாவட்ட திட்ட இயக்குநர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், மனநல தோழிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அனைத்து மாவட்ட உதவித் திட்ட அலுவலர்களின் (A&A) செயல்பாடுகள் குறித்து கூடுதல் இயக்குநர் (கூட்டாண்மை மற்றும் கூடுகை) திருமதி. கே. சுமதி அவர்கள் 18.06.2020 அன்று சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் காணொலிக் காட்சி மூலம் ஆய்வு நடத்தினார். இந்த ஆய்வின் போது மாநில திட்ட மேலாளர் (O&P), பொது மேலாளர் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் மேலாளர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம், 21.07.2020 அன்று அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (வாழ்வாதாரம்) திரு. எஸ். சாமுவேல் இன்பதுரை அவர்கள் தலைமையில் காணொலிக் காட்சி மூலம் நடைபெற்றது. இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தில் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் மேலாளர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோவிட்-19 விழிப்புணர்வு குறித்து உதவித் திட்ட அலுவர்கள் மற்றும் வட்டார மேலாளர்களுக்கு TOT பயிற்சி 2020 ஜுன் 15 முதல் 17 வரை நடைபெற்றது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு) அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்தப் பயிற்சி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் பொது மேலாளர் திருமதி. சி. சந்தோஷினி சந்திரா, TNVRC-யின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. தீபா ராஜ்கமல், TNVRC-யின் திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. காளத்தி ஆகியோரால் காணொலிக் காட்சி வாயிலாக நடத்தப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் உதவித் திட்ட அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் இணை இயக்குநர் திருமதி. எஸ். பாரிஜாதம் அவர்களின் தலைமையில் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளின் நிலை குறித்தும், அடைந்துள்ள இலக்குகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது

நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கு கடனுதவி வழங்கும் பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் (PM-SVANitdhi) திட்டம் குறித்த கூட்டம் இணை இயக்குநர் திருமதி. எஸ். பாரிஜாதம் அவர்களின் தலைமையில் 24.07.2020 அன்று அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் அனைத்து மாவட்ட உதவித் திட்ட அலுவலர்களுக்கும் திட்டம் குறித்த விளக்கம் அளிக்கப்பட்டது.

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி இணைப்பு குறித்து தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அனைத்து மாவட்ட உதவித் திட்ட அலுவலர்களுடனான (FI) கலந்தாய்வுக் கூட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் இணை இயக்குநர் (நுண்கடன்) செல்வி. அ. நிருபா ராணி அவர்களின் தலைமையில் 17.06.2020 அன்று அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது. இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தில் முதுநிலை ஆலோசகர் (நிதி உள்ளாக்கம்) திரு. கே. எம். திருநாவுக்கரசு, உதவி ஒருங்கிணைப்பாளர் (நுண் கடன்) திருமதி. துளசிபாய் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

நகர்ப்புறங்களில் உள்ள தெருவோர வியாபாரிகளுக்கு பயனளிக்கும் பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் (PM-SVANidhi) [தெருவோர வியாபாரிகளுக்கான சுய சார்பு திட்டம்]

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை மக்களின் வறுமையைப் போக்கிட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன் ஒருபகுதியாக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் பதிவு செய்துள்ள நகர்ப்புற தெருவோர வியாபாரிகளின் பொருளாதார வளர்ச்சிக்காக அவர்களுக்கு கடன் வழங்கும் வகையில் பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் (PM-SVANidhi) (தெருவோர வியாபாரிகளுக்கான சுய சார்பு திட்டம்) என்ற பெயரில் புதிய திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் சிறப்பு அம்சம்

இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் பதிவு செய்துள்ள நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ரூ. 10,000/- கடனாக வழங்கப்படும். இந்தக் கடனுக்காக வியாபாரிகள் எவ்வித பிணையமோ அல்லது அடமானமோ வங்கிக்கு செலுத்த வேண்டியதில்லை.

கடனுக்கான வட்டி

இக்கடனுக்கான வட்டியில் 7 விழுக்காடு அரசு மானியமாக வழங்கப்படும்.

திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டு, பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் (PM-SVANidhi) திட்டத்தின் கீழ் நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கு கடனுதவிகளை வழங்கினார்.

விண்ணப்பிக்கும் முறை

நகர்ப்புற வாழ்வாதார மையம் (அ) மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் அலுவலகங்கள் மூலம் https://pmsvanidhi.mohua.gov.in/ என்ற இணையதளத்தின மூலம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை கணினி வாயிலாக அனுப்புவதற்கு ரூ. 50/- கட்டணமாக செலுத்த வேண்டும்.

ஆத்ம நிர்பார் திட்டத்தின் கீழ் கடன் பெற தேவையான ஆவணங்கள்

தெருவோர வியாபாரி என்பதற்கான அடையாள அட்டை, தெருவோர வியாபாரிகள் கணக்கெடுப்பு எண் (Survey Reference No), ஆதார் எண் மற்றும் வாக்காளர் அடையாள அட்டை போன்ற ஆவணங்களை சமர்பிக்க வேண்டும்.

விண்ணப்பித்ததற்கான சான்று

ஆத்மநிர்பார் (PM-SVANidhi) திட்டத்தின் கீழ் கடனுதவி பெற கணினி வாயிலாக விண்ணப்பித்தவுடன் பயனாளிகளின் கைப்பேசிக்கு குறுஞ்செய்தி (SMS) வாயிலாக விண்ணப்ப எண் அனுப்பப்படும்.

ஆத்ம நிர்பார் திட்டத்தின் கீழ் கிடைக்கும் மற்ற சலுகைகள்

UPI போன்ற மின்னணு பண பரிவர்த்தனை செய்தால் குறைந்தபட்சம் ரூ. 100/- முதல் ரூ. 1,200/- வரை ஊக்கத் தொகை கிடைக்கும்.

கடனை திரும்பச் செலுத்தும் தவணைக் காலம்

வங்கியில் பெறும் கடனை 12 மாத தவணைகளில் திரும்பச் செலுத்த வேண்டும்.

கடன் தொகையை அதிகரித்தல்

முதலில் பெறும் கடன் தொகையை தவணை தவறாது கட்டி முடித்தால், மீண்டும் ரூ. 20,000/- வரை கடன் பெற வாய்ப்புள்ளது.

மேலும் விபரங்களைப் பெற

மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்க அலுவலகங்கள் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார மையங்களை (CLC) அணுகவும்.

சமுதாய அமைப்பாளர்களுக்கான கலந்தாய்வுக் கூட்டம்

சென்னை மாவட்ட தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க சமுதாய அமைப்பாளர்களுக்கான கலந்தாய்வுக் கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 05.08.2020 அன்று சென்னை ரிப்பன் மாளிகை, அம்மா மாளிகையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையாளர் (கல்வி) திரு. சங்கர்லால் குமாவத், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர்/ திட்ட இயக்குநர் திருமதி. கே. சுமதி, உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

➤ கடலூர் மாவட்டம்

ஸ்ரீ வேதாத்திரி மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிக் கதை

கடலூர் மாவட்டம், பண்ருட்டி நகராட்சிப் பகுதியில் உள்ள SPDR தெருவில் கடந்த 10 வருடங்களாக ஸ்ரீ வேதாத்திரி மகளிர் சுய உதவிக் குழு 20 உறுப்பினர்களுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்தக் குழுவினர் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சுய வேலைவாய்ப்பு திட்டம் (FG - SEP-G) மூலம் வங்கி கடன் உதவியாக ரூ. 6,00,000/- பெற்று 'வேதா புட்ஸ்' என்ற பெயரில் சிறுதானிய சத்து மாவு உற்பத்தி செய்து விற்பனை செய்து வருவதுடன் வேதா தையல் பயிற்சி நிலையமும் நடத்தி வருகின்றனர். தற்போது இக்குழுவினர், கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக தங்களின் தையல் பயிற்சி நிலையத்தின் மூலம் முகக்கவசம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இக்குழுவினர் தயாரித்துள்ள சுமார் 30,000 முகக் கவசங்கள் கடலூர் மாவட்ட மகளிர் திட்ட அலுவலகத்தின் வாயிலாக பிற அரசுத் துறை அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி, பண்ருட்டி நகராட்சிப் பகுதியில் முகக்கவசம் விற்பனை மையம் அமைத்து முகக்கவசங்களை விற்பனை செய்து வருகின்றனர். இதன் மூலம் இப்பகுதியில் உள்ள மக்கள் பயன் பெற்று வருகின்றனர். ஸ்ரீவேதாத்திரி மகளிர் சுய உதவிக் குழுவின் மூலம் உற்பத்தி செய்யப்படும் வேதா சத்து மாவு பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட கடைகளில் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் கிடைக்கும் வருவாய் குழுவின் உறுப்பினர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. மேலும் தாங்கள் தயாரிக்கும் பொருட்களை ஆன்லைன் மூலம் விற்பனை செய்யவும் திட்டமிட்டு அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஸ்ரீ வேதாத்திரி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள், தங்களது குழுவிற்கு வங்கி கடன் வழங்கி, தொழில் மேற்கொள்ள வைத்து தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வழிகாட்டிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம்

சூரிய ஒளியினைப் பயன்படுத்தி கிருமி நாசினி தயாரிக்கும் திருவள்ளூர் மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள்

பொதுவாக கிருமிநாசினிகள் பயன்பாட்டில் 60% மேலாக 'ஹைப்போ கரைசல்' எனப்படும் சோடியம் ஹைப்போ குளோரைட் (0.05 to 1%) உலகளவில் பயன்பாட்டில் உள்ளது. இக்கரைசல் மக்களின் அன்றாட பயன்பாட்டில் உள்ள மிகச் சிறந்த சுத்தம் செய்யும் முக்கிய கிருமி நாசினி ஆகும்.

கொரோனா ஊரடங்கினால் கிருமி நாசினிக்கு கூடுதல் தேவை உள்ளதாலும், அதன் தட்டுப்பாட்டினை போக்கவும், தன்னிறைவு அடையும் பொருட்டு மாவட்ட நிர்வாகத்தினால் பல முயற்சிகள் எடுக்கப்பட்ட நிலையில் 'சூரிய ஒளி சக்தியைப் பயன்படுத்தி எளிய தொழில் நுட்பம் மூலம் குறைந்த செலவில் கிருமி நாசினி தயாரிக்கும் இயந்திரம்' திருவள்ளூர் மாவட்டம் குத்தம்பாக்கத்தை சேர்ந்த முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் / அறிவியலாளர் திரு. இளங்கோ அவர்களால் வடிவமைக்கப்பட்டது. இந்த இயந்திரத்தை மகளிர் சுய உதவிக் குழுவினர் வாங்கவும், அதன் மூலம் ஊரகப் பகுதிகள், கிராம அளவில் மற்றும் நகர்புற பகுதிகளில் உற்பத்தி செய்து, உள்ளாட்சிகள் பயன்பாட்டிற்கும், மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுக்கு விற்பனை செய்யவும், அதன் மூலம் மகளிர் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தியதின் பேரில், திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வை. ஜெயக்குமார், தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மலர் கொடி நகர் மற்றும் அம்சா நகர் பகுதி அளவிலான கூட்டமைப்புகளின் (ALF) மூலம் 'சோடியம் ஹைப்போ கரைசல்' தயாரிக்கும் பணி திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு தற்போது நன்முறையில் பயன்பாட்டில் உள்ளது.

'சோடியம் ஹைப்போ கரைசல்' உற்பத்தி செய்யும் அலகு சூரிய ஒளி சக்தியால் செயல்படுகிறது. எனவே, மின்சார செலவு இல்லை. மேலும், இந்த அலகு ஒவ்வொரு 25 லிட்டர் உற்பத்திக்கும் 1.5 k watt மின்சாரத்தினை உற்பத்தி செய்து நுகர்கிறது. இதனால் 3.5 கிலோ நிலக்கரி எரிப்பது குறைக்கப்படுவதால் கார்பன் வெளியீடு தடுக்கப்பட்டு கார்பன் டை ஆக்ஸைடு அதிகரிப்பது தடுக்கப்படுகிறது. மேலும் தயாரிக்கும்போது சுற்றுச்சூழலை பாதிக்கும் வேறு எந்த வேதிப்பொருளும் வெளியேற்றப்படுவதில்லை.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் கிருமி நாசினியை வீட்டின் தரையை / சுற்றுப்புறத்தினை சுத்தம் செய்வதற்கு 25 லிட்டர் திடக்கரைசலை 100 லிட்டர் நீர்த்த கரைசலாக நீர்க்கச் செய்து பயன்படுத்தலாம். தெருக்களில் தொற்றுப்பரவாமல் இருக்க தெளிக்கலாம், மேலும் வடிகட்டுவதன் மூலம் குடிநீர் சுத்திகரிக்க ஆறு லிட்டருக்கு இரண்டு சொட்டுகள் பயன்படுத்தி சுத்திகரிக்கலாம். உள்ளாட்சிகளின் நீர் தேக்க தொட்டிகளில் 3000 லிட்டருக்கு ஒரு லிட்டர் என்ற வீதத்தில் பயன்படுத்தி சுத்தமான குடிநீர் விநியோகமும் செய்ய முடியும். இந்த இயந்திரத்தினை பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு (ALF) வழங்கிய சுழல் நிதியின் (RF) மூலம் கொள்முதல் செய்து நிறுவி அதன் மூலம் உற்பத்தி செய்யும் கிருமி நாசினியை மாவட்ட ஆட்சியரகம், அரசு அலுவலகங்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுக்கு குறைந்த விலையில் நகர வாழ்வாதார மையத்தின் (City Livelihood Centre) மூலம் விற்பனை செய்யப்பட்டு கூடுதலாக கிடைக்கும் வருவாயின் மூலம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தங்களது வாழ்வாதாரத்தை மேம்பாடுத்தி வருவது இதன் சிறப்பு அம்சமாகும்.

கன்னியாகுமரி மாவட்டம்

தனிநபர் கடன் திட்டத்தால் அடைந்த முன்னேற்றம்

எனது பெயர் மரியலீமா ரோஸ், க/பெ. செல்வமணி, எங்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். நான் அஞ்சுகிராமம் பேரூராட்சியில் சிவசுப்பிரமணியபுரம் ஜேம்ஸ் டவுன் பகுதியில் வசித்து வருகிறேன்.

நான் நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவள், எனது கணவர் தனியார் நிறுவனத்தில் தினக்கூலிக்கு வாகன ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறார். அவரது ஊதியம் மிக குறைவானஅளவில் உள்ளதால் எனது குடும்பத்தின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதே சிரமமாக இருந்து வந்தது. எங்கள் பகுதியில் செயல்படும் மல்லிகை மகளிர் சுய உதவிக் குழுவின் பொறுப்பாளராக செயல்பட்டு வரும் நான், வீட்டிலிருந்தபடியே ஏதாவது சுய தொழில் செய்யலாம் என்று தீர்மானித்து 10 கோழிகள் வாங்கி வளர்த்து வந்தேன். அதன் மூலம் குறைந்த அளவில் மட்டுமே வருவாய் ஈட்ட என்னால் முடிந்தது.

இந்நிலையில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் எங்களது பகுதியில் துவக்கப்பட்ட சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இணைந்தேன். அப்போது சுய தொழில் செய்ய விரும்பும் நபர்களுக்கு வங்கிகள் மூலம் வட்டி மானியத்துடன் கூடிய தனிநபர் கடன் திட்டத்தின் பயன்பாடுகள் பற்றி அறிந்தேன். வங்கி கடன் பெற்றால் என்னுடைய குடும்ப வருமானத்தில் மேற்படி வங்கிக் கடன் தொகையினை நிலுவையில்லாமல் கட்ட இயலுமா என்ற ஐயம் என்னுள் இருந்தது.

வங்கிக் கடனைத் திரும்பக் கட்ட முடியும் என்ற தன்னம்பிக்கையுடன், கோழிப்பண்ணை அமைக்க அழகப்பபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கிளை மூலம் ரூ. 4,00,000/- கடன் பெற்றேன். அந்தத் தொகையினைக் கொண்டு கோழிப் பண்ணை அமைத்தேன். தற்போது எனது கோழிப்பண்ணையில் 500க்கு மேற்பட்ட கோழிகள் உள்ளன. தற்போது ரூ. 5000/- முதல் ரூ. 8000/- வரை எனக்கு மாத வருமானம் கிடைக்கின்றது. இதன் மூலம் நான் வங்கியில் பெற்ற கடனை திரும்பச் செலுத்தி வருவதுடன், எனது குடும்ப தேவைகளையும் பூர்த்தி செய்ய முடிகிறது. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் சுய தொழில் செய்து என் வாழ்வில் முன்னேற்றம் அடைந்துள்ளேன் என்பதை நினைத்து பெருமை கொள்கிறேன்."

நீலகிரி மாவட்டம்

கிரீன் கார்டன் மகளிர் சுய உதவிக்குழுவின் வெற்றி

நீலகிரி மாவட்டம், உலிக்கல் பேரூராட்சிக்குட்பட்ட பாரதி நகர் பகுதியில் 2009ம் ஆண்டு 12 ஏழைப் பெண்கள் ஒருங்கிணைந்து கிரீன் கார்டன் மகளிர் சுய உதவிக்குழு ஆரம்பித்து குன்னூர் NDCC வங்கியில் கணக்கு துவங்கி செயல்பட்டு வருகின்றனர். வங்கியில் கடன் பெறும் வழிமுறைகளை தெரியாமலும், யாரை அணுகுவது என்று புரியாமலும் இருந்த சூழ்நிலையில் 2016ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் முதற்கட்டமாக ரூ. 2,00,000/- கடன் பெற்று 2 ஏக்கர் நிலம் குத்தகைக்கு எடுத்து நீலகிரி மலைக்காய்கறிகளை இயற்கை முறையில் விவசாயம் செய்தனர்.

பின்னர் இரண்டாம் கட்டமாக வங்கியில் ரூ.5,00,000/- கடன் பெற்று தற்பொழுது 5 ஏக்கர் நிலத்தில் இயற்கை முறையில் காய்கறிகளை விவசாயம் செய்து வருகின்றனர். இக்காய்கறிகளை மேட்டுப்பாளையம் சந்தையின் மூலம் பல்வேறு இடங்களுக்கு அனுப்பி சந்தைப்படுத்தி, அதன் மூலம் வருமானம் ஈட்டி வங்கி கடனை சரியான நேரத்தில் திரும்ப செலுத்தி வருகின்றனர். தற்பொழுது குழுவின் சேமிப்புத் தொகை ரூ. 2,40,000/- உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது கொரோனா காலத்தில் பொது மக்கள் வெளியில் வர இயலாத சூழ்நிலையில் இக்குழுவின் பெண்கள் ஒருங்கிணைந்து தரமான காய்கறிகளை மினி லாரியில் ஏற்றிச் சென்று பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் காய்கறிகளை வியாபாரம் செய்து வருகின்றனர். இக்குழுவின் ஊக்குநரான திருமதி. மணிமேகலை என்பவரே வாகனத்தை ஓட்டிச் செல்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் காய்கறி விற்பனை மூலம் மாதம் வருமானமாக உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூ. 10,000/- முதல் ரூ.15,000/- வரை கிடைக்கின்றது.

தங்களை காய்கறி விவசாயிகளாக மாற்றி தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு கிரீன் கார்டன் மகளிர் சுய உதவிக்குழுவின் உறுப்பினர்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம்

சிறப்புற பணியாற்றி வரும் சிவகங்கை மாவட்ட ஆயத்த ஆடை தயாரித்தல் மையங்கள்

சிவகங்கை மாவட்ட மகளிர் திட்டம் மூலம் சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த வாணியங்குடி, சோழபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த பூவந்தி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, எஸ். புதூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த முல்லை மற்றும் கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கார்மேகம் ஆகிய ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் அலகுகள் செயல்பட்டு வருகின்றன. கொரோனா தொற்று நோயின் ஊரடங்கு உத்தரவின் காரணமாகவும், நோய் தொற்றின் தற்காப்பு உபகரணமான முகக் கவசங்களின் தேவை அதிகரித்ததாலும் முகக் கவசங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனரின் வழிகாட்டுதலின்படி மகளிர் திட்டம் மூலம் மேற்காணும் ஆயத்த ஆடை தயாரித்தல் அலகுகளின் மூலம் முகக் கவசங்கள் தயாரிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி முகக் கவசங்கள் தயாரிப்பதற்கான மூலப்பொருள்களான பருத்தி துணிகள், நூல் மற்றும் நாடா ஆகிய பொருட்கள் மகளிர் திட்ட மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு மேற்காணும் அனைத்து ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் அலகுகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டது. நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுடன் சமுதாய இடைவெளியை மேற்கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலம் மேற்காணும் அலகுகள் செயல்படுவது உறுதி செய்யப்பட்டது. மேலும், தயார் செய்யப்பட்ட முகக் கவசங்கள் மகளிர் திட்டம் மூலம் சேகரிக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் தங்கு தடையின்றி முகக் கவசங்கள் கிடைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. நாள் ஒன்றிற்கு ஒவ்வொரு அலகின் வாயிலாக சுமார் 1500 முகக் கவசங்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 10/- என நிர்ணயிக்கப்பட்ட மிகக் குறைந்த விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் இந்த ஆடை தயாரித்தல் அலகுகள் வாயிலாக வெளிநபர்களின் மொத்த தேவைகளுக்கும் முகக் கவசங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மகளிர் திட்டம் வாயிலாக பொது சுகாதார துறை, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் (ஊராட்சிகள்/பேரூராட்சிகள்), வங்கிகள், சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு பணியாளர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆகிய அலுவலகங்களுக்கும் முகக் கவசங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இதுவரை சுமார் 74,265 முகக்கவசங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையும் செய்யப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று நோய் ஊரடங்கு காலத்தில் முகக் கவசங்கள் தயாரித்தல் பணியினை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பைச் சார்ந்த மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மிகவும் சிறப்பாக மேற்கொண்டதுடன், தங்களது வருமானத்தையும் உயர்த்தியுள்ளனர். கடந்த இரண்டு மாத காலமாக தங்களுக்கு பணி வாய்ப்பு வழங்கி, தங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வாய்ப்பளித்த சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றியை உரித்தாக்குவதாக ஆடை தயாரித்தல் அலகுகளின் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கூறினார்கள்.

சேலம் மாவட்டம்

முககவசம் மற்றும் சுகாதார பொருட்கள் உற்பத்தி

சேலம் மாவட்டத்தில் கொரோனா தடுப்பு பணிகளில் மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதில் மகளிர் திட்டம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களை கொண்டு முகக்கவசம், சானிடைசர், கிருமி நாசினி மற்றும் கையுறைகள் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் செங்காந்தள் நாப்கின் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வங்கி இணைப்பாக ரூ.7 லட்சம் இந்தியன் வங்கி மூலமாக கடன் உதவி வழங்கப்பட்டு மருத்துவத் துறைக்குத் தேவையான சர்ஜிகல் முகக்கவசம் (Surgical Mask), PPE kit (Personal Producted Equipment) மற்றும் மெத்தை விரிப்பு (Pillow cover & Bed sheet) தயாரிக்கும் பணிகளை மேற்கொண்டனர். இவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் (DSMS) மூலமாக மாவட்ட சுகாதாரத் துறைக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசு துறை மூலமாக ரூ.5.61 லட்சம் மற்றும் தனியார் மருத்துவமனையில் ரூ.8.75 லட்சம் என மொத்தம் ரூ.14.36 லட்சத்திற்கு விற்பனை செய்துள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்டம்

வேளாண் இயந்திர வாடகை மையம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் வேளாண் தொழிலை மேம்படுத்தவும், வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற கூலித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டும் விவசாயத்தில் தேவைக்கு ஏற்ப இயந்திரங்களை கொண்டு ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு மூலம் 'வேளாண் இயந்திர வாடகை மையம்' அமைத்து அனைத்து மகளிர் விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திலிருந்து 15% நிதி பங்களிப்புடனும் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பிலிருந்து 5% நிதி பங்களிப்புடனும் மற்றும் வேளாண் பொறியியல் துறையிலிருந்து மானியமாக 80% பங்களிப்புடனும் ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்கள் கொண்டு வேளாண் இயந்திர வாடகை மையம் அமைக்கப்பட்டுள்ளது. ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகளில் விவசாயத்தில் விதை விதைத்தல், நடவு நடுதல், களைஎடுத்தல், மருந்து தெளித்தல், அறுவடை செய்தல், நெல் தரம் பிரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் பெண்கள் மற்றும் வேளாண்மை இயந்திரங்களை கையாளக்கூடிய 2025 பெண்களை கொண்டு வேளாண் படை அமைத்து வேளாண் இயந்திர வாடகை மையம் செயல்பட்டு வருகிறது.

வேளாண் இயந்திர வாடகை மையம் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வண்ணம் செயல்பட்டு வருகிறது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான இயந்திர மயமாக்கப்பட்ட நடவடிக்கைகள் விரிவடைந்து வருகிறது. வாடகை இயந்திர மையத்தின் இயந்திரங்கள் பாதுகாப்பான இடத்தில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. வாடகை இயந்திர மையத்திற்கு வாங்கப்பட்ட வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் பயன்பாட்டிற்கு சரியான நேரத்தில் கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது திருவையாறு வட்டாரத்தில் முன்மாதிரியாக தில்லைஸ்தானம் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பில் ரூ. 10.00 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வேளாண் தொழிலாளர் படை குழுவின் மூலம் வேளாண் இயந்திர வாடகை மையம் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. வேளாண் இயந்திர வாடகை மையம் மூலம் விவசாயிகள் விவசாய வேலை பாடுகளுக்கு தேவையான இயந்திரங்களைப் பெற்று பெரிதும் பயன் பெறுகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம்

நலமான கிராமம், வளமான பாரதம்

கொரோனா, ஆட்கொல்லி நோயாக காட்டுத்தீ போல் பரவி வரும் இக்கால கட்டத்தில் மக்களின் உயிரையும், அவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கும் பணியில் அரசும், அரசு நிறுவனங்களும் இரவு, பகல் பாராது உழைத்து வருகின்றன. நோய் பரவல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் செவ்வனே செய்து வருகிறது. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தொடர்ச்சியான அறிவுரையின்படி பல்வேறு தடுப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக கொரோனா தடுப்பு மற்றும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவோருக்காக இராமநாதபுரம் மாவட்டத்தினைச் சார்ந்த சுய உதவிக்குழு பெண்கள் முகக்கவசம் மற்றும் கை சுத்திகரிப்பான் திரவம் ஆகியவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

மேலும் சமுதாயம் முன்னெடுத்த கண்காணிப்பு மற்றும் நோய் பரவல் தடுப்பு நடவடிக்கையாக மாவட்டம் முழுவதும் உள்ள சுய உதவிக்குழு பயிற்றுநர்கள் மற்றும் தன்னார்வலர்கள் என சுமார் 2500க்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

கிராம ஊராட்சிகள்தோறும் உள்ள சுய உதவிக் குழு தன்னார்வலர்கள் அனைத்து உறுப்பினர்களோடும், குடும்பங்களோடும் தொடர்பில் இருப்பதோடு, அக்குடும்பங்கள் பற்றிய அடிப்படைத் தகவல்களை பதிவு செய்யும் தகவல் சேகரிப்புப் பணியை கடந்த 01.07.2020 முதல் தொடங்கி உள்ளனர். இத்தகவல் சேகரிப்பில் சம்பந்தப்பட்ட குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியம் சார்ந்த தகவல்களை சேகரிப்பதுடன், கொரோனா பரவலில் இருந்து தற்காத்து கொள்ளும் வழி முறைகளையும், நோய் தொற்று ஏற்பட்டால் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் வீடு வீடாக எடுத்துச் சொல்லி விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியும் துவங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பணியானது மாவட்டந்தோறும் உள்ள 3.83 இலட்சம் குடும்பங்கள் பற்றிய தகவல் சேகரிப்பதுடன் அக்குடும்பங்களுடன் தொடர்பில் இருந்து அவர்களின் உடல் நலன் சார்ந்த தரவுகளை குறைந்தது மாதத்திற்கு 3 முறை பெறுவதை உறுதி செய்யும்.

இப்பணியினை கண்காணிக்க மாவட்ட அளவில் 2 உதவி திட்ட அலுவலர்கள் நியமிக்கப்பட்டதுடன் வட்டார வாரியாக கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முற்றக் கச்சேரி 2.0

அன்புள்ள முற்றம் வாசகர்களே!

சுய உதவிக் குழுவின் ஊக்குனர் மற்றும் உறுப்பினர்களிடையே நடைபெறும் உரையாடல்கள் மற்றும் கேள்வி பதில்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளியிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

இடம் : சுய உதவிக் குழு அலுவலகம்.

கதை மாந்தர்கள் : ஊக்குநர் மதி, உறுப்பினர்கள் மீனா, கீதா மற்றும் லதா

சுய உதவிக் குழு அலுவலகத்தில் ஊக்குநர் மதி அமர்ந்திருக்கிறார். உறுப்பினர்கள் மீனா, கீதா மற்றும் லதா ஆகியோர் வருகின்றனர். மூவரும் அலுவலகத்தின் வெளியே உள்ள தண்ணீர் குழாயில் தங்களின் கைகளை சோப்பு போட்டு நன்கு கழுவி விட்டு வருகின்றனர். ஒவ்வொருவரும் முகக் கவசம் அணிந்து கொண்டிருக்கின்றனர்.

மதி: *வா... மீனா... வா கீதா... வா லதா வாங்க... வாங்க... வந்து உட்காருங்க...*

மீனா, கீதா மற்றும் லதா : *வணக்கம் மதி அக்கா, நல்லா இருக்கீங்களா?*

மதி: *நல்லா இருக்கேன். நீங்கள் நல்லா இருக்கீங்களா?*

லதா: *நாங்க நல்லா இருக்கோம் அக்கா...*

மதி: *ரொம்ப சந்தோசம். கொரோனா தடுப்பு நடவடிக்கையில சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு சிறப்பா இருக்குதுன்னு அனைவரும் பாராட்டுறாங்க.*

கீதா: *அப்படியா அக்கா... ரொம்ப சந்தோசம் அக்கா...*

மதி: *இந்தப் பாராட்டை ஊக்கமாக வைத்துக் கொண்டு இன்னும் சிறப்பாக நாம செயல்படணும். சரியா...*

மீனா: *அப்படியே செயல்படுகிறோம் அக்கா...*

கீதா: *கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையில நம்ம நகர்ப்புற*

வாழ்வாதார இயக்கம் சார்பாக என்னவெல்லாம் செய்யறாங்கன்னு கொஞ்சம் சொல்லுங்க அக்கா...

மதி: என்ன இப்படி கேட்டுட்ட, கொரோனா தடுப்பு நடவடிக்கையில நம்ம நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பாக என்ன செஞ்சிருக்காங்கன்னு சொல்றேன் கவனமாக கேட்டுக்குங்க.

லதா: சொல்லுங்க அக்கா...

மதி: நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பாக செயல்படுற சுய உதவிக் குழுக்கள் முகக் கவசங்கள், கிருமிநாசினிகள், கைகழுவும் சோப்பு திரவம், கவச உடை போன்றவற்றை தயாரிக்கிறாங்க...

மீனா: அதுதான் எங்களுக்குத் தெரியுமே அக்கா? வேற என்னெல்லாம் செய்யறாங்க, அதப்பத்தி சொல்லுங்க...

மதி: ஒவ்வொண்ணா சொல்றேன் கேளுங்க... ஊரடங்கு காலத்தில தேவையில்லாம மக்கள் வெளியில் வருவதை தடுக்கும் வகையில் அவர்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள், காய்கனிகளை பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் செயல்படும் நம்ம சுய உதவிக் குழுவினர் அவங்க வீட்டுக்கே கொண்டு வந்து தராங்க...

லதா: அது எப்படி அக்கா...?

மதி: நகர்ப்புற ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் நம்ம சுய உதவிக் குழுக்களுக்கு என ஒரு செயலிய (App) உருவாக்கி இருக்காங்க. பொதுமக்கள் இந்த செயலியைப் பயன்படுத்தி தங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள், காய்கனிகள் குறித்த விபரங்களைப் பதிவு செய்திட்டா, அவங்க வீடு தேடி பொருட்கள நம்ம சுய உதவிக் குழுக்கள் மூலமாக கொண்டு வந்து தராங்க.

மீனா: இது ரொம்ப நல்லா இருக்கே... நாமும் இனிமே இந்த செயலியைப் பயன்படுத்தி பொருட்கள வாங்கிட வேண்டியதுதான்...

மதி: கண்டிப்பாக நாம எல்லோரும் இந்த செயலியைப் பயன்படுத்தி பொருட்கள வாங்கலாம். இப்போதைக்கு இந்த செயலி பெருநகர சென்னை மாநகராட்சியில மட்டும்தான் பயன்பாட்டுக்கு உள்ளது. சீக்கிரம் எல்லா ஊருக்கும் பயன்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டு வருது.

கீதா: அட...

மதி: இதுமட்டுமில்ல... நகர்ப்புறங்களில் தெருவோரங்களில் வசிக்கும் மக்களுக்காக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தங்குமிடங்களில் வீடற்றவர்கள் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது.

மீனா: ரொம்ப நல்லா இருக்கே அக்கா...

கீதா: சரி மதி அக்கா... கொரோனா ஊரடங்கு காலத்துல நம்ம சுய உதவிக் குழுக்களுக்கு அரசாங்கம் கடனுதவி ஏதாவது தந்திருக்காங்களா?

மதி: என்ன இப்படி கேட்டுட்ட கீதா... கொரோனா ஊரடங்கு காலத்துல சுய உதவிக் குழுக்கள் சிரமப்படாம இருப்பதற்காக நம்ம மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் சுய உதவிக் குழுக்களுக்கு கோவிட்-19 சிறப்பு கடனுதவியாக ரூ. 68 கோடியும், நேரடிக் கடனாக ரூ. 238 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

கீதா: அட நம்ம முதலமைச்சரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரும் சுய உதவிக் குழுக்களுக்கு நிறைய நன்மைகளை செய்து வராங்க...

லதா: சரியா சொன்ன கீதா...

கீதா: கொரோனா தடுப்பு நடவடிக்கையில நம்ம நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சிறப்பாக செயல்பட்டுகிட்டு இருக்காங்க...

மதி: ஒன்ன சொல்ல மறந்துட்டேன். நம்ம பெரும்பாக்கம், கண்ணகி நகர் போன்ற குடியிருப்பு பகுதிகளில் கொரோனா தொற்று பரவாமல் தடுத்ததுல நம்ம நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தைச் சேர்ந்த குழுவினர் சிறப்பாக செயல்பட்டிருக்காங்க...

கீதா: அப்படியா... அதப் பத்தி கொஞ்சம் சொல்லுங்க அக்கா...

மதி: நம்ம ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் ஆலோசனைப்படி, நம்ம தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களின் தலைமையில், பெரும்பாக்கம், நாவலூர், AIR நகர் மற்றும் கண்ணகி நகர் ஆகிய பகுதியில் உள்ள குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தாங்க. அதன் காரணமாக இப்ப அந்தப் பகுதிகளில் கொரோனா தொற்று மிகவும் குறைவாக இருக்குதாம்.

கீதா: நம்ம சுய உதவிக் குழுக்கள் சீக்கிரமே கொரோனாவை ஒழிச்சிடுவாங்க...

மதி: ஆமா... ஆனா கொரோனாவை ஒழிக்க நாம மட்டும் செயல்பட்டா போதாது. நம்ம நல்வாழ்விற்காக அரசாங்கம் சொல்லும் அறிவுறுத்தல்களையும் நாம கேட்கணும். மற்றவர்களையும் கேட்கும்படி செய்யணும்.

லதா: எப்படி அக்கா?

மதி: வெளியில் போகும் போது தவறாம முகக் கவசம் அணியணும், தனி நபர் இடைவெளியைக் கடைபிடிக்கணும். அடிக்கடி கிருமிநாசினி கொண்டு கைகளைக் கழுவணும். மற்றவர்களையும் இதை கடைப்பிடிக்கச் செய்யும்படி சொல்லணும்.

மீனா, கீதா மற்றும் லதா: கண்டிப்பா செய்கிறோம் அக்கா... இப்ப நாங்க கிளம்பட்டுமா?

மதி: சரி போயிட்டு வாங்க... எச்சரிக்கையாக இருங்க...

லதா, கீதா, மீனா மூவரும் மதியிடம் விடைபெற்று, தங்களின் வீடுகளுக்குச் செல்கின்றனர்.

(முற்றக் கச்சேரி தொடரும்)

தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY)

உலக இளைஞர் தினம் - ஆகஸ்ட் 2020

'ஒளி படைத்த கண்ணினாய், உறுதி கொண்ட நெஞ்சினாய், களி படைத்த மொழியினாய், கடுமை கொண்ட தோளினாய், தெளிவு பெற்ற மதியினாய்' என்றெல்லாம் விளித்துரைத்து நம் பாரதத்தின் இளைஞர்களை வா! வா! வா! என்று பாட்டெழுதிய புலவர் பாரதியாரின் எண்ணங்களை பிரதிபலிக்கும் / பண்படுத்தும் வகையில் நமது அரசானது (அரசுகளானது) திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

ஆக்கப்பூர்வமான சிந்தனை, விடாமுயற்சி, அறிவாற்றல், பொறுப்புணர்வு, தனித்திறன், துணிச்சல் மற்றும் இவற்றிற்கெல்லாம் மேலாக தன்னம்பிக்கை முதலான திறன்களை உடையவர்களாக நம் பாரதத்தின் இளைஞர்கள் உள்ளனர்.

இயற்கை பேரிடர் காலங்களிலும், நலம் தரும் பாரம்பரியத்தை காப்பதிலும், கிராமியத்தின் வளங்கள் பறிக்கப்படும் பொழுது அறவழியில் போராடி அதில் வெற்றி பெறுவதிலும், சில சர்வதேச நெருடல்களின் தருணங்களை எதிர்கொள்வதிலும், நம் தேசத்திற்கு நலம் தரும் வகையில் தனித்துவமாக விளங்குபவர்கள் நம் நாட்டின் இளைஞர்கள் என்றால் அது மிகையன்று.

சன்னலருகே வைக்கப்பட்டுள்ள செடியானது, வெளிச்சம் தேடி வெளியே வளைந்து செல்வதைப் போல, விடாமுயற்சி உடைய இளைஞர்களாகவும், உலக நாடுகளின் தேவைகளுக்கேற்ப தம் திறமைகளை வெளிப்படுத்தி முன்னேறும் தன்மையில் வல்லவர்களாகவும் நம் தேசத்தின் இளைஞர்கள் உள்ளனர். 'Never, Never, Never Give Up' என்ற வின்ஸ்டன் சர்ச்சில் அவர்களின் உரை வீச்சினை மெய்ப்பிப்பவர்களாக இந்திய இளைஞர்கள் பயணிக்கின்றனர்.

ஆகஸ்ட் 12, 2020ல் உலக இளைஞர்கள் தினம் கொண்டாடப்படும் இத்தருணத்தில் அண்ணல் காந்தியடிகளின் எண்ணப்படி "இந்திய நாட்டின் முதுகெலும்பாகத் திகழும் கிராமப்புறங்களின் (ஊரகப் பகுதியின்) இளைஞர்கள் தத்தம் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப வேலைவாய்ப்பினை நேரடியாகவோ அல்லது பயிற்சி பெற்றோ அடைந்திட வேண்டும்" என்ற சீரிய எண்ணத்தின்படி உருவாக்கப்பட்டுள்ள தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) என்ற திட்டம் பற்றி எடுத்துரைப்பது பொருத்தமானதாக இருக்கும்.

தமிழ்நாட்டில் DDU-GKY திட்டமானது 2012-2013ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வறுமை, வாய்ப்பின்மை, குடும்ப சூழ்நிலை, பாதுகாப்பின்மை, சமூகப் பிரச்சனை, பல்வேறு இடர்பாடு, இயலாமை போன்ற காரணங்களால் புறந்தள்ளப்பட்டு பள்ளிப் படிப்பை தொடர முடியாத ஊரகப் பகுதி இளைஞர்கள், மேற்படிப்புக்குச் செல்லாமல் முடங்கிய இளைஞர்கள், பட்டம்/பட்டயம் முதலான படிப்பினை முடித்தும், பாதியில் நிறுத்தியுமுள்ளவர்களான இளைஞர்கள் என கிராமங்கள் தோறும் இளைஞர்கள் பட்டியல் இடப்பட்டு, முகாம்கள் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு DDU-GKY திட்டத்தின் மூலமாக தங்களது தகுதிக்கும், திறமைக்கும் ஏற்ப பயிற்சியும், வேலைவாய்ப்பும் பெற்றிட ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

DDU-GKY திட்டத்தின் கீழ் இளைஞர்களின் தேவை மற்றும் விருப்பத்திற்கேற்ப பயிற்சியும், வேலைவாய்ப்பும் வழங்கி, அதன் மூலம் பயிற்சி பெற்ற இளைஞர்களின் குடும்பங்கள் வருமானம் அதிகரித்து மேம்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்ட செயலாக்க முகமைகள் (PIAs) மூலம் பயிற்சி வழங்கப்பட்டு பயிற்சி பெற்ற இளைஞர்களை மாதாந்திர ஊதியத்தின் அடிப்படையில் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தி தொடர் கண்காணிப்பும் திட்ட செயலாக்க முகமைகள் மேற்கொள்கின்றன.

மேற்கண்ட DDU-GKY பயிற்சிகளை வழங்கும் திட்ட செயலாக்க முகமைகளானது NCVT மற்றும் SSC-ன் பாடத்திட்டங்களைப் பின்பற்றி இளைஞர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதோடு, பயிற்சியின் நிறைவாக திறனறிவுத் தேர்வு மூலம் சான்றிதழ்களை வழங்கி வேலைவாய்ப்பையும் ஏற்படுத்தி வருகின்றன.

DDU-GKY திட்டத்தின் சில அம்சங்கள் :

- ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர், மாற்றுத் திறனாளி, நலிவுற்றோர் மற்றும் பெண்கள் போன்றவர்கள் பயனடைந்திட சிறப்பு கவனமும், இட ஒதுக்கீடும், வயதுச் சலுகையும் அமையப் பெற்றுள்ளன.
- ஊரகப் பகுதியைச் சேர்ந்த ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த 18 முதல் 35 வயது வரை உள்ள இளைஞர்கள் தகுதியானவர்களாவர்.
- தமிழ்நாட்டில் ஜூலை 2020 வரை DDU-GKY திட்டத்தின் மூலம் ஊரகப் பகுதி குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள்

பின்வரும் விபரப்படி பயிற்சியும், வேலைவாய்ப்பும் பெற்று பயனடைந்துள்ளனர்.

1. தகவல் தொழில் நுட்பம் பிரிவுகளில் - 14,868
2. விருந்தோம்பல் பிரிவுகளில் - 3,483
3. கட்டுமானம் பிரிவுகளில் - 1,221
4. ஆயத்த ஆடை பிரிவுகளில் - 10,040

வேலை வாய்ப்பு முகாம்கள் :

DDU-GKY திட்டத்தின் மூலம் ஏற்கனவே கல்வித் தகுதி மற்றும் தொழில் நுட்ப / திறன் பயிற்சி முடித்துள்ள வேலைவாய்ப்பு நாடும் இளைஞர்கள் (ஊரகம் மற்றும் நகரம்) பயன் பெறும் வகையில் மாவட்டங்கள்தோறும், வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும், வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

- கடந்த இரண்டு மாதங்களில் 53 நிறுவனங்கள் மூலம் சுமார் 25,485 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- மேலும், NASSCOM, TMI, ISS, Loyal Textiles, NIFT.NET ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒரு இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெற உத்தரவிடப்பட்டுள்ளது.
- தற்போதைய கொரோனா தொற்று காரணமாக நேரடி வேலைவாய்ப்பிற்கு மாற்றாக மின்னணு வாயிலான வேலைவாய்ப்பு முகாம்கள் (Online Job Fair) நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஊரக சுய வேலை வாய்ப்புப் பயிற்சி நிறுவனங்கள் (RSETIs)

ஊரக சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனமானது (RSETIs) மாவட்டந்தோறும் அந்தந்த மாவட்டத்தில் செயல்படும் முன்னோடி வங்கிகள் மூலம் நிர்வகிக்கப்பட்டு வரும் ஒரு சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனம் ஆகும். கிராமப்புறத்தைச் சேர்ந்த 18 முதல் 45 வயது வரை உள்ள இருபால் இளைஞர்களுக்கும், சுய வேலைவாய்ப்புப் பயிற்சி அளித்து, பயிற்சிக்குப் பின் வங்கிக் கடன் உதவி அளித்து தொழில் முனைவோராக உருவாக்கி, வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்தகைய பயிற்சி மையங்கள் சொந்தக் கட்டிடத்தில் செயல்பட ஏதுவாக மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூபாய் ஒரு கோடி நிதி வழங்கப்படுகிறது. மாநில அரசின் பங்களிப்பாக பயிற்சி மையம் கட்டுவதற்கான இடம் தலா ஒரு ஏக்கர் வீதம் 27 மாவட்டங்களுக்கு சுமார் 27 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சொந்த பயிற்சி கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மாவட்டந்தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே ஊரகப் பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. 2020-2021ஆம் ஆண்டில் 23,200 பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்க ரூபாய் 1,918.39 இலட்சம் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பயிற்சி மையங்களின் மூலம் கடந்த 2019-2020 ஆண்டில் 27,112 பயனாளிகளுக்கு பல்வேறு தொழில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன், பயிற்சிக்குப் பின் 17,817 பயனாளிகள் சொந்த மூலதனம் கொண்டும், வங்கிக் கடன் உதவி பெற்றும் சுய தொழில் புரிந்து வருவாய் ஈட்டி வருகின்றனர்.

தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டம் மற்றும் ஊரக சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனங்கள்(RSETIs) மூலம் ஊரகப் பகுதி இளைஞர்கள் நேரடியாகவும், திறன் பயிற்சி அளிக்கப்பட்டும், வேலை வாய்ப்பினைப் பெற்று, அதன் மூலம் ஏழை எளிய குடும்பங்கள் கூடுதல் வருமானம் பெற்று வாழ்வாதாரத்தில் மேம்பட்டிட வேண்டும் என்ற தலையாய நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள சமுதாயம் சார்ந்த மக்கள் அமைப்புகளான ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை குறைப்பு சங்கம் தங்களது கிராம ஊராட்சியில் இளைஞர்களின் நிலைப்பாடுகளை அவ்வப்போது பட்டியலிட்டு வருகின்றன. ஏழை எளிய குடும்பங்களின் இருபால் இளைஞர்கள் DDU-GKY திட்டத்தின் மூலம் பயிற்சியும், வேலைவாய்ப்பும் பெற்றிட அவரவர் கிராமங்களில் CP (Job) எனும் பொறுப்பில் நியமிக்கப்பட்டவரிடம் படிவத்தின் வழியில் தகவல் அளித்து, மத்திய அரசின் 'கௌசல் பஞ்ச்' எனப்படும் App-ல் பதிவேற்றம் செய்து இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.

கொரோனா தடுப்புப் பணியில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் பணிகள்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் ஊரகத் தொழில் மேம்பாட்டிற்காக கொரோனா சிறப்பு நிதியுதவித் தொகுப்பு திட்டம்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் திட்ட ஊராட்சிகளில் சுய உதவிக் குழு உறுப்பினர் மற்றும் உறுப்பினர் குடும்பங்களைச் சார்ந்தவர்களால் நடத்தப்பட்டு, கொரோனா வைரஸ் தொற்று முழு முடக்கத்தால் பாதிக்கப்பட்ட ஊரகத் தொழில்களை மேம்படுத்துவதற்காகவும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோரால் மேற்கொள்ளப்படும் வாழ்வாதாரத் தொழிலை மேம்படுத்துவதற்காகவும், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் (குழு) பிற பகுதிகளுக்கு புலம் பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பிய இளைஞர்கள் புதிதாக தொழில் துவங்கிடவும், ரூ.300 கோடியில் சிறப்பு நிதி உதவி தொகுப்புத் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் ஒருபகுதியாக தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 27.06.2020 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் ஊரகத் தொழில் மேம்பாட்டிற்காக கொரோனா சிறப்பு நிதியுதவித் தொகுப்பு திட்டத்தின் மூலம் 1,407 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.3 கோடியே 58 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களைத் துவக்கி வைத்து, 10 பயனாளிகளுக்கு ரூ.2.05 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

ஊரகப் புத்தாக்கத் திட்டம்

தொழில் குழுக்களின் தோழனாய் வந்த திட்டம்!
ஊருக்கே உணவளித்து வந்த உழவர்களை
ஊக்குவிக்க வந்த திட்டம்!
இளைஞர்களின் இன்னல் தீர்க்க வந்த திட்டம்!
நலிவுற்றோர் நலம் பெற வந்த திட்டம்!
மாற்றுத் திறனாளியை மகிழ்வடைய செய்ய வந்த திட்டம்!
ஏழைகள் ஏற்றம் பெற வந்த திட்டம்!
சிறகொடிந்து போயிருந்த தொழில் முனைவோர்கள்
சிறகடித்து பறக்க வைக்க வந்த திட்டம்!
எங்கள் திட்டம் ஊரகப் புத்தாக்கத் திட்டம்!

– பி. ஜெயக்குமார், வட்டார அணித் தலைவர்,
ஊரகப் புத்தாக்கத் திட்டம், பவானிசாகர் வட்டாரம்,
ஈரோடு மாவட்டம்

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா சிறப்பு நிதி உதவி தொகுப்பு திட்டத்தின் கீழ் 5047 பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்குதல்

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்கள், 19.06.2020 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கொரோனா சிறப்பு நிதி உதவி தொகுப்பு திட்டத்தினைத் துவக்கி வைத்து, 5047 பயனாளிகள் பயன் பெறக் கூடிய வகையில் 5.16 கோடி ரூபாய் மதிப்பிலான நிதி உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. இராஜாமணி அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.P.R.G.அருண் குமார், திரு.O.K.சின்னராஜ், திரு.V.C.ஆறுக்குட்டி மற்றும் பிற பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் கொரோனா சிறப்பு நிதி உதவி தொகுப்பு திட்டமானது காரமடை, பெரியநாயக்கன்பாளையம், அன்னூர் மற்றும் சர்க்கார் சாமகுளம் ஆகிய 4 வட்டாரங்களைச் சார்ந்த 54 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பழங்குடியினரின் வாழ்வு மேம்பட உதவிய தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

என் பெயர் சுப்பிரமணி, தமிழ் ஆதியன் என்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்த நானும் எனது இனத்தைச் சார்ந்தவர்களும், தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் இருக்கிறோம். மாடுகளை அலங்கரித்து குறி சொல்வது, பாட்டுப் பாடுவது, வாக்குச் சொல்வது என்று எங்கள் தொழில் இருந்தது. எங்களை பூம்பூம் மாட்டுக்காரர்கள் என்று மக்களும் அழைத்து வந்தனர். இப்போதும் எங்களில் பலர் அத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியம், நாகமங்கலத்தில் இருக்கும் எங்களுடைய 125 குடும்பங்களில் 90 சதவிகிதத்தினருக்கும் மேற்பட்டவர்கள் 22 வருடங்களாக திருஷ்டி பொம்மை வியாபாரம் செய்து வருகிறோம். திருஷ்டி பொம்மைகள் செய்வதற்கான மூலப் பொருட்களை இராமேஸ்வரம், கடலூர் மற்றும் திருப்பதி ஆகிய இடங்களுக்குச் சென்று வாங்கி வருகிறோம்.

கொரோனா தாக்கத்தினால் கடந்த ஆறு மாதங்களாக எங்களால் எந்தத் தொழிலும் செய்ய முடியாமலும், நாங்கள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்ய முடியாததாலும் எங்களின் வாழ்க்கை மிகவும் சிரமமாக இருந்தது. இந்தத் தருணத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் மூலம் எங்களுக்குக் கடனுதவியாக ரூ. 10,000/- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் வழங்கப்பட்டது. அந்தத் தொகையைக் கொண்டு மறுபடியும் எங்களுடைய வியாபாரத்திற்குத் தேவையான மூலப்பொருட்களை வாங்கினோம். இப்போது வியாபாரத்திற்கும் சென்று எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறோம். தற்போது எங்களால் ஒரு நாளைக்கு ரூ. 500/ல் இருந்து ரூ.1,000/- வரை ஈட்ட முடிகிறது. தக்க சமயத்தில் எங்கள் வாழ்விற்கு வழிகாட்டிய உதவிய தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு நன்றி.

கொரோனா முடக்கத்தில் உதவிய தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அந்தநல்லூர் ஒன்றியம், முத்தரசநல்லூர் கிராமத்தில் வசித்து வரும் திரு. நாத்திகமணி, விக்ரம் என்னும் மாற்றுத் திறனாளி குழுவில் உறுப்பினராக உள்ளார். எலக்ட்ரானிக்ஸ் கம்யூனிகேஷன் படித்துள்ள இவர், எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் பழுது நீக்கும் பணியினை செய்து வருகிறார். கொரோனா காலத்தில் இவருடைய தொழிலிலும் முடக்கம் ஏற்பட்டது. தான் உறுப்பினராக இருக்கும் சுய உதவிக் குழுவினை அணுகி உதவி கோரிய நாத்திகமணிக்கு முத்தரசநல்லூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் ரூ.15,000/- வழங்கப்பட்டது. இந்தக் கடனுதவி நாத்திகமணியின் தொழிலினை மேம்படுத்த பெரிதும் உதவியாக இருந்தது. கொரோனா முடக்கத்தின் போதும் தன்னைப் போன்றவர்களின் தொழிலினை மேம்படுத்த உதவிக்கரம் நீட்டிய தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு தன்னுடைய நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றார் நாத்திகமணி.

கொரோனாவை வென்றிடுவோம்!!

யார் வைத்தது இந்த அழகுப் பெயர்??
இந்த அழகுக்குள்ளே புதைந்திருப்பது ஆபத்தா??அறிவுரையா? ?
கடவுள் கொடுத்த விலைமதிப்பில்லா இன்னுயிரைவைத்து,
ஆளாளுக்கு விலை பேசினோம்...! விலையும் போனோம்...!!

ஜாதிவெறி, மதவெறி, பணபலம், அதிகாரம், ஆடம்பரம்
இது மட்டுமா கொண்டோம்??
இவை அனைத்தையும் ஒரு முகக்கவசத்திற்குள்ளும்,
கையுறைக்குள்ளும் அடக்கிவிட்டது கொரோனா...!!

நாகரீகத்தின் தலைமகன் என்று சொல்லிக்கொண்டு
தங்கக் கரண்டியில் உண்டவன் கூட இன்று
நாளுக்கு இருபது முறை, கைரேகை தேயும் வரை
கை கழுவி உண்கிறான்; கை கூப்பி வணங்குகிறான்!!

செல்போனின் ரீங்காரமும், சினிமாவின் சிங்காரமும்
இரு கண்கள் என கண்மூடி வாழ்கிறோம்...
வாழ்வின் ஆணிவேரான உறவுகளை கை கழுவினோம்,
இன்று கைகளைக் கழுவுவது மட்டுமே வேலையாக இருக்கிறோம்!!

நம் தலையில் கொட்டி, கன்னத்தில் அறைந்து
அறைகூவல் விடுத்துச் சொல்கிறது!
இவை கொரோனா தந்த பாடமா?
இல்லை இயற்கை நமக்கு கொடுத்த சாபமா?

இந்த விந்தையான விஞ்ஞான உலகில் கொரோனா மரணம்
நம்முடைய வாசலுக்கு வந்து, அழைப்பு மணியை அடிக்கும் முன்பு
இந்த நச்சுயிர் நசுக்குப்படுமா??
உலக வரைபடத்திலிருந்து நீக்கப்படுமா? ?
பதில் தெரிந்தால் சொல்லுங்களேன் நண்பர்களே!!

இனி வரும் காலம் இளைஞர்கள் காலம்
என்ற கூற்றை பொய்யாக்காமல்,
போலிகளுக்கும், போதைகளுக்கும்,
அதிகாரத் தோரணைகளுக்கும் அடிபணியாமல் போராடுவோம்...!
கொன்று குவிக்கும் கொரானாவை வென்றிடுவோம்...!!

– சு. கவிதா
செயல் அலுவலர் (தொழில் முனைவு)
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்
கோயமுத்தூர் மாவட்டம்

புது வசந்தமாக வந்த புத்தாக்கத் திட்டம்

எனது பெயர் சந்திரா. நான் ஈரோடு மாவட்டம், பவானிசாகர் வட்டாரம், தொட்டம்பாளையம் என்ற கிராமத்தில் வசிக்கிறேன். எனது இளமை பருவம் மிகவும் ஏழ்மையானது. எனது பெற்றோர் ஏழை நெசவாளர்கள். எனது பெற்றோர் எங்களைவிட ஏழ்மையான குடும்பத்தில் என்னை திருமணம் செய்து வைத்தனர். எனது கணவரும் ஒரு ஏழைக் குடும்பத்தினைச் சார்ந்த நெசவு தொழிலாளி. சரியான வருமானம் இல்லை. இவ்வாறு வறுமையும் ஏழ்மையும் கொண்ட குடும்பம் என்னுடையது.

அன்றாடம் துயரத்திலேயே சென்ற என் வாழ்வில் மேலும் ஒரு இடியாக கொரோனா என்னும் பெருந்துயரம் வந்து சேர்ந்தது. இந்த சூழ்நிலையில் வறுமையும் வேலையின்மையும் எங்களை வாட்டி வதைத்தது. வாழ்க்கையில் துயரத்தின் உச்சத்திற்கே சென்று கடைசி நம்பிக்கையையும் இழந்து நின்ற என் வாழ்வில் புது வசந்தமாக வந்தது ஊரகப் புத்தாக்கத் திட்டம். இந்த திட்டத்தின் மூலம் நான் ரூ, 42,000/- கடன் பெற்று, கைத்தறி தொழிலுக்குத் தேவையான நூல், பாவு ஆகியவற்றை வாங்கி மீண்டும் நல்லபடியாக எனது தொழிலை செய்து, தற்போது மாதம் ஒன்றிற்கு ரூ. 15,000/- வரை சம்பாதிக்கின்றேன்.

எனது வாழ்வில் புது வசந்தமாக வந்த ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய வாழ்வு தந்த ஊரகப் புத்தாக்கத் திட்டம்

எனது பெயர் மு. சுதாகர், நான் திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி ஊராட்சி ஒன்றியம், தளபதி சமுத்திரம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். Diplomo in Hotel Management படித்துள்ள நான், தொழில் வாய்ப்புக்காக மகாராஷ்ட்ரா மாநிலம், சோலாப்பூர் பகுதியில் உள்ள பெரிய ஓட்டலில் பிரியாணி, சைனீஸ் புட்ஸ் மற்றும் இதர உணவு மாஸ்டராக 2 வருடத்திற்கும் மேல் வேலை பார்த்து மாதம் 20,000/- ரூபாய்க்கும் மேல் சம்பளம் பெற்று வந்தேன்.

தற்போது கொரோனா வைரஸ் நோய் காரணமாக

அரசு ஊரடங்கு அறிவித்ததன் காரணமாக ஹோட்டல் தொழில் முடக்கப்பட்டு வேலை வாய்ப்பின்றி இருந்த நான், சொந்த ஊருக்கு வந்து 4 மாதமாக எவ்வித வேலைவாய்ப்புமின்றி இருந்த நேரத்தில் சொந்த ஊரிலேயே உணவகம் சார்ந்த தொழில் தொடங்க நினைத்தேன். ஆனால் அதற்கான முதலீட்டிற்காக போதிய பண வசதியின்றி தவித்தேன். அப்போது தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்ட மூலம், திறன் பெற்ற புலம் பெயர்ந்த இளைஞர்களுக்கு புதிய தொழில் தொடங்க கடனுதவி அளிப்பதாகக் கேள்விப்பட்டு முறைப்படி எங்கள் ஊராட்சியில் உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் கடன் பெற விண்ணப்பித்தேன்.

எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, எனக்கு முறையாக தொழில் ஆலோசனைகள் மற்றும் புதிய தொழில் தொடங்க கடனுதவியாக ரூ. 1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம்) கிடைக்கப் பெற்றது. அந்தத் தொகை மற்றும் எனது சொந்த நிதியான ரூ. 50,000/-ம் சேர்த்து மொத்தம் ரூ.1,50,000/-த்தைக் கொண்டு சாலையோரம் சிற்றுண்டி உணவகம் அமைத்து, தற்போது நான் டிபன், சைனீஸ் உணவுகள் மற்றும் நூடுல்ஸ் என உணவு வகைகளை எனது சிற்றுண்டி சாலையில் விற்பனை செய்து வருகிறேன். இதன் மூலம் எனக்கு தினசரி வருமானமாக ரூ.1,000/- முதல் ரூ. 1,500/- வரை கிடைக்கிறது. புலம் பெயர்ந்து வந்த எனக்கு புதிய வாழ்வு தந்த ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு மிக்க நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கை கொடுத்த புத்தாக்கத் திட்டம்

என் பெயர் கௌரி, கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டாரம், கல்குணம் ஊராட்சியில் காளான் வளர்ப்பு தொழில் செய்து வரும் நான், காதாயியம்மன் மகளிர் சுய உதவி குழுவில் உறுப்பினராக இருக்கிறேன். நாங்கள் உற்பத்தி செய்யும் காளானை விருதாச்சலம், திருச்சி, பெரம்பலூர், தொழுதூர், திண்டுக்கல், மார்த்தாண்டம், நாகர்கோவில், கேரளா, ஆந்திரா ஆகிய ஊர்களில் விற்பனை செய்கிறோம்.

இந்நிலையில் கொரோனாவால் காளானை உற்பத்தி செய்வதிலும், விற்பனை செய்வதிலும் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டது. உற்பத்தி செய்த காளானை எல்லாம் விற்க முடியாமல் தவித்து கொண்டு இருக்கும் போது, தமிழக அரசின் ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வாயிலாக கல்குணம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் தனிநபர் தொழில் கடன் கொடுப்பதாக சொன்னார்கள். உடனே எங்களுடைய காதாயியம்மன் குழு மூலமாக விண்ணப்பம் செய்தேன். விண்ணப்பித்த நான்கு நாளில் எனக்கு ரூ. 50,000/- கடனுதவி கிடைத்தது. ‘தடுக்கி கீழே விழும் போது தகுந்த நேரத்தில் கைகொடுத்தது’ போல அந்தப் பணத்தை மூலதனமாகக் கொண்டு புதுவிதமாக காளான் ஊறுகாய், காளான் பொடி போன்றவற்றை தயார் செய்கிறோம். அதுமட்டும் இல்லாமல் காளான் வளர்ப்புக்கு தேவையான இடுபொருளை வாங்குவதற்கும் அந்தப் பணத்தை பயன்படுத்தி கொண்டோம்.

காளான் ஒரு சிறந்த உணவு. இதனை அனைவரும் எடுத்துகொள்வது மிகவும் நல்லது. வாரத்திற்கு இருமுறை காளான் எடுத்துக்கொள்வது உடல் நலத்திற்கு மிகவும் நல்லது. என்னுடைய காளான் வளர்ப்பு தொழிலை மீண்டும் தொடர்ந்து சிறப்பாக செய்ய உதவிய தமிழக அரசுக்கும், ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கும் மிகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் உணவு முறைகள்

நாம் உயிர் வாழ உணவு மிக முக்கியம். அந்த உணவானது நம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்து, நம்மை நோய்கள் தாக்காது இருக்க செய்ய வேண்டும். தற்போதைய கொரோனா வைரஸ் தொற்று காலகட்டத்தில் நோய் எதிர்ப்பு சக்தி பெற கீழ்கண்ட உணவுகளை சாப்பிடுவது நன்மையைத் தரும்.

தினமும் காலை மாலை இருவேளையும் சிறிதளவு உப்பு கலந்த மிதமான வெந்நீரால் வாயை கொப்பளிக்கவும். மிதமான சூடான பாலில் சிறிதளவு மஞ்சள், மிளகு, பனங்கற்கண்டு சேர்த்து பருகவும்.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் இயற்கை பானம்

நாட்டு நெல்லிக்காய்- 1/2 துண்டு, துளசி- 20 இலைகள் (50 மிலி), இஞ்சி (தோல் நீக்கியது)- 1/4 துண்டு (சிறியது), எலுமிச்சை- 1 /4 துண்டு (சிறியது), மஞ்சள் தூள்- 1/4 டீஸ்பூன், தண்ணீர்- 150 மிலி இவைகளை ஒன்றாக சேர்த்து நன்கு கலந்து பெரியவர்கள் 250 மிலி, சிறியவர்கள் 100 மிலி என்ற அளவில் ஒரு நாளைக்கு இரண்டு வேளை பருகவும்

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் சூடான பானம்

இஞ்சி (தோல் நீக்கியது)- சிறிய துண்டு (5 கிராம்), துளசி- 10 இலைகள் (50 மிலி), மிளகு- 1/4 டீஸ்பூன், அதிமதுரம்- 1/2 டீஸ்பூன், மஞ்சள் பவுடர்- 1/4 டீஸ்பூன் மற்றும் தண்ணீர்- 250 மிலி இவைகளை ஒன்றாக சேர்த்து பச்சை வாசனை போகும் வரை கொதிக்க வைத்து வடிகட்டி, பெரியவர்கள் 50 மிலி, சிறியவர்கள் 20 மிலி என்ற அளவில் ஒரு நாளைக்கு இரண்டு வேளை பருகவும்.

காலை உணவு

அரிசி கஞ்சி, இட்லி, தோசை, இஞ்சி சட்னி / தக்காளி சட்னி / புதினா சட்னி (அல்லது) முளைகட்டிய பயறுகள் (பச்சை பயறு + நிலக்கடலை + தேங்காய் + வெங்காயம் + எலுமிச்சை + மிளகு) - 50 கிராம் +

காய்கறி பசுங்கலவை - (கேரட் + முட்டைக்கோஸ் + வெள்ளரிக்காய் + தேங்காய் + இஞ்சி (அனைத்தும் துருவியது) + தக்காளி + வெங்காயம் + எலுமிச்சை + மிளகு சேர்த்தது) - 150 கி + பழங்கள் (ஆப்பிள் + வாழைப்பழம் / பப்பாளி / ஒரு பருவகால பழம்) - 200 கிராம்

குறிப்பு :

- ஒரு நாளைக்கு 3 முதல் 4 லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும்.
- சுவைக்கு தேன் அல்லது வெல்லம் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு உணவு தயாரிப்பிலும் மஞ்சள் தூள் சேர்த்து கொள்ளவும்.

காலை 11.00 - 11.30 மணி

கேரட் சாறு, அன்னாசி சாறு, மோர் (வெந்தய தூள் சேர்த்தது) (நீரிழிவு நோயாளிகள்) (அல்லது) நெல்லிக்காய் + ஒரு பழம் (கொய்யா / ஆப்பிள் / வாழைப்பழம்) / பப்பாளி (துண்டுகளாக நறுக்கியது)

மதியம் உணவு

புழுங்கல் அரிசி சாதம் / சிறுதானிய அரிசி சாதம் (வரகு / சாமை / தினை / குதிரைவாலி) சாம்பார் (பூசணி / கேரட் + பீன்ஸ் / முருங்கைக்காய்), கீரை கூட்டு (முருங்கை / அரைகீரை / சிறுகீரை), வேக வைத்த சர்க்கரைவள்ளி கிழங்கு, ரசம் (தக்காளி மிளகு ரசம்) அல்லது பூண்டு ரசம், மோர் (கொத்தமல்லி, கறிவேப்பிலை, பெருங்காய தூள் - இஞ்சி சேர்த்தது)

இரவு உணவு

சிறுதானிய கிச்சடி (அல்லது) சிறுதானிய பொங்கல் / அரிசி பொங்கல்-இடியாப்பம், தக்காளி சாம்பார் / தக்காளி வெங்காய தொக்கு / தேங்காய் சட்னி

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (74,600 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

22-ம் ஆண்டில் வெற்றிநடை போடும்

முற்றம்

- சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
- முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!
- முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு	ரூ. 180
இரண்டு ஆண்டு	ரூ. 360
மூன்று ஆண்டு	ரூ. 540

விளம்பரக் கட்டணம்

அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். பரிசும் வழங்கப்படும்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
மேலாளர், முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 3வது மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 1st Week of the every month

“எங்கள் வாழ்வும், எங்கள் வாழ்வாதாரமும்,
எங்கள் கையில் என சங்கே முழங்கு!”

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் திட்டத்தின் மூலம்,
நகர்ப்புற ஏழை, எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக
பல்வேறு திட்டங்களைத் தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது
பெருமைக் குரியது.